வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 18.05.2023 வியாழக்கிழமை இதழ் : 160 பக்கங்கள் : 16

## சந்தர்ப்பம் வரும்போது புலிகளும் அரசுடன் பேசுவதற்கு தவறவில்லை

### பேசவேண்டியது கடமை என்கிறார் சிறீதரன் எம். பி.

கிளிநொச்சி, மே 18
தமிழீழத்துக்காக போராடிய விடுதலைப் புலிகளும் பேச்சுகளுக் கான சந்தர்ப்பம் வரும் போது பேசத் தவற வில்லை. தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட நாங்கள் தமிழ் மக்களின் பிரச் னைகளுக்காக பேசும் சந்தர்ப்பம் வரும்போது பேசவேண்டியது கடமை என பாராளுமன்ற உறுப் பினர் சி. சிறீதரன் தெரி வித்தார்.
கிளிநொச்சி வட்டக் கச்சி பிரதேச வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர் களின் கேள்வி

15

## வடக்கு, கிழக்கில் வெப்பம் உச்சம் தண்ணீர் அருந்துமாறு அறிவுரை!

கொழும்பு, மே 18
வடக்கு, கிழக்கு மற் றும் வட கிழக்கு, வட மேல் மாகாணங்களின் பல பகுதிகளில் உடலால் உணரப்படும் வெப்பத் தின் அளவு கவனம் செலுத் தப்பட வேண்டிய மட் டத்தில் உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித் துள்ளது.
வெப்பமான வானிலை குறித்து எச்சரிக்கை விடுத் துள்ள திணைக்களம், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அதிக வெப்பம் நிலவுகிறது என்

15

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று

### உணர்வுபூர்வ அஞ்சலிக்கு வடக்கு, கிழக்கு தயார்

முல்லைத்தீவு, மே 18
தமிழினப் படுகொலையை நினைவுகூரும் 14ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு நாள் இன்றாகும். இந்த நினைவு நாளை தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு முழுவதிலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், சகலரையும் வீடு களில் சுடர் ஏற்றி படுகொலையான மக்களை நினைவு கூரு மாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.




பிரதான நிகழ்வு முள் ளிவாய்க்காலில் அமைந் துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நடைபெறவுள்ளது. முற்பகல் 10. 05 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப் பட்டு, பிரகடன உரை வாசிக்கப்பட்டு, அஞ் சலி நிகழ்வு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு அறிவித் துள்ளது.
இந்த நிகழ்வுக்கு முன்னதாக போர் காலத் தில் கொல்லப்பட்ட பொது மக்களை நினைவு கூர்ந்

15

## கல்லடி கடற்கரையிலும் இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

மட்டக்களப்பு, மே 18
முள்ளிவாய்க்கால் - மே 18 தமிழின படுகொலை யின் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடை பெறவுள்ளது. இதில் மக் கள் அனைவரையும் ஒன்றுகூடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் அழைப்பு விடுத்துள்ளார்.
நேற்றைய தினம் அவரின் பணிமனையில் நடத்திய செய்தி யாளர் சந்திப்பி லேயே அவர்

15

## தொல்பொருளுக்கு சேதமின்றி பூசை, வழிபாட்டை தொடரலாம்!

### வெடுக்குநாறிமலை வழக்கில் நீதிமன்று

வவுனியா, மே 18
வெடுக்குநாறிமலை ஆலயத்தில் தொல்பொ ருளை சேதமாக்காத வண் ணம் எளியமுறையில் வழிபாடுகளை மேற் கொள்ளுமாறு வவுனியா நீதிமன்றம் உத்த ரவு வழங்கியது டன், விக்கிரகங்

15

## கொழும்பு சென்ற இளைஞரை 7 மாதங்களாக காணவில்லை!

### உதவுமாறு தாயார் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொழும்பில் வேலை செய்துகொண்டிருந்த நிலையில் காணமல் போயுள்ளார்.
யாழ்ப்பாணம் - காங் கேசன்துறை மயிலிட்டி தாளையடி வீதியைச் சேர்ந்த சிவகுமார் பிந்து சன் என்ற 29 வயதான இளைஞரே இவ்வாறு



காணாமல் போயுள்ளார்.
இவர் கொழும்பு புறக்கோட்டையில் வேலை செய்து கொண்டிருந்த

15

## முள்ளிவாய்க்கால் அஞ்சலியில் அனைவரும் பங்கேற்க வேண்டும்!

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு

முல்லைத்தீவு, மே 18
இன்றும் இடம் பெற்று வருகின்ற பல வேறு வகையான இன அழிப்பு விடயங்கள் - பௌத்த மயமாக்கல் களுக்கு எதிராகவும் முள் ளிவாய்க்கால் நினைவேந் தலில் அனைவரையும் பங்கெடுக்குமாறு முள்ளி வாய்க்கால் நினைவேந் தல் குழுவின் வட, கிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவரான அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ் ரோங் அழைப்பு விடுத்துள்ளார்.

15

## கைதான ஆனல்ட் பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, மே 18
கைது செய்யப்பட்ட யாழ். மாநகர சபை முன் னாள் முதல்வர் இமானு வேல் ஆனல்ட்டை ஒரு இலட்சம் ரூபாய் பெறு மதியான சரீரப் பிணை யில் விடுவித்தது யாழ்ப் பாணம் நீதிவான் நீதி மன்றம்.
அத்துடன், அவருக்கு எதிரான வழக்கு எதிர்வ ரும் ஜூலை 17 ஆம் திக திக்கு ஒத்திவைக்கப்பட் டுள்ளது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக் கூட்டத் தின் பின்னர் ஏற்பட்ட முரண்பாட்டில் சக கட் சிக்காரரை ஆனல்ட் தாக் கினார் என்று யாழ்ப்பா ணம் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு அளிக் கப்பட்டது.

15

## வடக்குக்கு தேவையானவற்றை வழங்க ஜனாதிபதி உறுதியளிப்பு

### வடக்கு ஆளுநர் சார்ள்ஸ்

கொழும்பு, மே 18
வடக்கு மக்களுக்கு தேவையானவற்றை வழங்க முழு ஒத்துழைப்பு தருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறு தியளித்துள்ளார் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித் துள்ளார்.
அத்துடன், தாராள சிந்தனை கொண்ட ஜனா திபதியின் கீழ் ஆளுநராக செயல்படுவதில் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.
பதவிப்பிரமாணத்தின் பின் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரி விக்கும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

15

## வடக்கு உட்பட 3 மாகாணங்களுக்கு ஆளுநர்களை நியமித்தார் ஜனாதிபதி

கொழும்பு, மே 18
வடக்கு, கிழக்கு மற்றும் வட மேல் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்களுக்கு ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க நேற்று புதன்கிழமை நியமனங்களை வழங்கினார்.
இதன்படி, வடக்கு மாகாண ஆளுநராக மீண்டும் திருமதி பியென்சியா சரோஜினி தேவி மன்மதராஜா சார்ள்ஸ், கிழக்கு

15



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி தேர்தல் ஒன்று இந்த ஆண்டுக்குள் நடந்தால் அதில், ரணிலுடன் போட்டியிட சஜித் தயக்கம் காட்டுவதாலேயே அவரே தமது வேட்பாளர் என்பதை திரும்பத்திரும்ப தீர்மானமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர். மிக அண்மையில்கூட அப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் செயல்குழு மீண்டும் நேற்று முன்தினம் அதே தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

சஜித்தின் மனநிலையை அறிந்து கொண்டதாலோ என்னவோ அண்மையில் அவரை சந்தித்த பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தான் போட்டியிடத் தயாராக இருப்பதாகக் கூறினாராம். சஜித்தே இன்றைய நிலையில் ரணிலுடன் மோதத் தயங்கும்போது அவரின் துணிச்சல் பாராட்டுக்குரியதுதான்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, அவர் அசைக்க முடியாத தலைவராக வலம்வந்தார். அப்போது அவரின் அந்த சாம்ராச்சியத்தையே தகர்ப்பதுபோல எதிரணிகள் எல்லாம் ஒன்றிணைந்து பொது வேட்பாளரைத் தேடியபோது மைத்திரி சரியான தெரிவாக அவர்களுக்குத் தெரிந்தது. மைத்திரி ஒரு வசீகரமான தலைவராக இல்லாவிட்டாலும் அரசியலில் அதுவரை ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகாதவர் என்பதும் மகிந்தவின் சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் என்பதும் அவருக்கு விசேட தகுதிகளாகின.

அதாவது மகிந்த அணியிலிருந்தே ஒருவரை பிரித்தெடுத்து வேட்பாளராக்கிய போது மகிந்தவும் சற்று பதற்றமடைந்ததை அப்போது காணமுடிந்தது.

எதிரணியினரின் அந்த வியூகம் வெற்றிபெற்ற போதிலும், மைத்திரி - ரணில் இடையேயான அந்தஸ்து போராட்டம் தீவிரமடைந்து அவர்களால் எதிர்பார்த்த அளவுக்கு அரசை கொண்டுநடத்த முடியவில்லை. இதேபோல அவர்களின் போதாக்காலம் ஈஸ்டர் தாக்குதல் நாட்டை நிர்மூலமாக்கியது. அதுவும் சேர்ந்து மீண்டும் மகிந்த ஆட்சிக்கு வர உதவியது.

ஆனால், ஆளும் தரப்பின் அந்த உட்கட்சி அடிதடி மகிந்தரை மீண்டும் பதவிக்கு வர உதவியபோதிலும், அரசியல் அனுபவமற்ற கோட்டாபயவின் தவறான ஆட்சியால் இன்று மீளமுடியாத அளவுக்கு மகிந்த சாம்ராச்சியம் வீழ்ந்து கிடக்கின்றது.

ரணில் நாட்டை பொருளாதார ரீதியில் தூக்கி நிமிர்த்தி விடுவார் என்ற நம்பிக்கை இன்று சாதாரணர்கள் மத்தியில் காணப்பட்டாலும் ஒரு தேர்தல் என்று வந்துவிட்டால் அதனை கையாள்வதற்கு தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் வாயிலான கட்டமைப்பு ஒன்று அவரிடமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் அந்தக் கட்டமைப்பு இப்போது ஐக்கிய மக்கள் சக்தி வசம் இருக்கின்றது.

நவம்பர் மாதத்துக்குப் பின்னர் ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு ரணில் செல்வதென்றால், அவருக்கு உதவக்கூடியது பொதுஜன பெரமுனவுக்கு கிராம மட்டத்தில் இருக்கும் கட்டமைப்புத்தான்.

ஆனால், ரணில் மீது என்னதான் மக்களுக்கு அபிப்பிராயம் இருந்தாலும் பொதுஜன பெரமுனவின் போர்வைக்குள் இருந்துகொண்டு ரணிலின் முகத்தை மக்கள் மத்தியில் விற்க முடியுமா என்பது தெரியவில்லை.

கடந்த தேர்தலில் கோட்டாபயவுக்கு வாக்களித்த அறுபத்தி ஒன்பது லட்சம் மக்களில் கணிசமானவர்கள் கடும் சிங்கள இனவாதிகள் என்பது இரகசியமானதல்ல. அவர்களின் வாக்குகளை எந்தப் போர்வையில் சென்றாலும் ரணிலால் வெற்றி கொள்ள முடியாது. மகிந்த ஆதரிக்கிறார் என்பதற்காக ரணிலை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதும் சந்தேகத்துக்கு உரியதே.

அதனால்தான் எதிரணிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து, அவர்களிலிருந்து அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் பெறக்கூடிய ஒருவரை பொதுவேட்பாளராக்க ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாகக் களம் இறங்கவிருக்கின்றது என்கின்றன கொழும்புச் செய்திகள்.

அதேவேளை, கோட்டாவின் ஆதரவுத்தளத்தை இலக்குவைத்து விமல்-கம்மன்பில கூட்டணியும் தீவிரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆனாலும் அவர்களாலும் நாடளாவிய ரீதியில் ஒரு தேர்தலை எதிர்கொள்வதற்கான எந்த ஆதாரமும் இல்லை. அவர்கள் சிலவேளை, ரணிலுக்கு கிடைக்கமுடியாத அந்த சிங்கள கடும் கோட்பாளர்களின் வாக்குகளை பிரித்தெடுத்தாலும் அதுகூட ரணிலுக்குத்தான் வாய்ப்பாக இருக்கும்.

தேர்தல் நெருங்க நெருங்க என்ன நடக்கும் என்பதை பார்க்கலாம். சில வேளைகளில் மைத்திரி கடைசி நேரத்தில் பிரிந்து சென்று பலமான பொது வேட்பாளராகியது போல, ரணில்- மகிந்த கூட்டணிக்கு எதிரான பலமான முகம் ஒன்று திடீரென்று முளைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**- ஊர்க்குருவி**

# முள்ளிவாய்க்கால் கஞ்சி மன்னாரில் வழங்கப்பட்டது

மன்னார், மே 18

மன்னார் மாவட்டத்தில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மெசிடோ நிறுவனத்தால் அடம்பனில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

தமிழின படுகொலை வாரத்தை முன்னிட்டு இனப் படுகொலைக்கு நீதி கோரி இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அஞ்சலி இடத்தில் தமிழின படுகொலை நினைவு நாள் மே-18 எனும் தொனிப் பொருளில் பதாகை காட்சிப் படுத்தப்பட்டு, வெள்ளைக் கொடி மற்றும் வெள்ளை நிற தோரணங்கள் பறக்கவிடப் பட்டுள்ளது.

இந்த நினைவேந்தல் மற்றும் கஞ்சி வழங்கும் நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)




## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 18

நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா நாட்களில் 'கந்தன் புகழ் பாடும் பாமாலை' என்னும் தொனிப் பொருளில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை தினமும் இரவு 7.00 மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் இந்த சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர்கள் சி. கா. கமலநாதன், செ. கந்த. சத்தியதாசன், செ. த. குமரன், பொன். சந்திரவேல், இளம் சைவப்புலவர்கள் ச. நவநீதன், நித்தியபாபுதரன் ஆகியோரும் ஆற்றுவர். (ஐ)

## ஆய்வரங்கு தொடர்!

யாழ்ப்பாணம், மே 18

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி முன்னெடுக்கப்பட்டு வரும், மாதாந்த ஆய்வரங்குத் தொடரின் 04ஆவது நிகழ்வு, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள, தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் "மக்கள் கலை இலக்கிய முன்னோக்கில் ஈழத் தமிழ் சிறுவர் இலக்கியம்" என்ற தலைப்பில் இந்த ஆய்வரங்கு நடைபெறவுள்ளது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் ஐ. சாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கில் ஆய்வுரையை எழுத்தாளர் இயல்வாணன் மேற்கொள்ளவுள்ளார். இதைத் தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

## மகளை வன்புணர்ந்த தந்தை விளக்கமறியலில்!

ஹற்றன், மே 18

தன்னுடைய மூன்று மகள்களில் மூத்த மகளான 19 வயது யுவதியை நீண்ட காலமாக பாலியல் வன்புணர்வு உட்படுத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டில் அவரின் தந்தை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம், ஹற்றன் - மஸ்கெலியா - மொக்கா தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

தன்னுடை தந்தை தன்னை தொடர்ச்சியாக அடித்து துன்புறுத்துகிறார் என்று பாதிக்கப்பட்ட யுவதி மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்பின்னர் தந்தை கைது செய்யப்பட்டார். பாடசாலை மாணவியான யுவதி மருத்துவ பரிசோதனைக்காக கிளங்கன் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதில், அவர் பலமுறை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமை கண்டறியப்பட்டது. யுவதியின் தாய், இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாக சென்றுள்ளார் என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.



## ஹர்சன எம். பி., முஜிபுருக்கு கட்சியில் புதிய பதவிகள்!

கொழும்பு, மே 18

ஐக்கிய மக்கள் சக்தி செயல்குழுவின் அனுமதியுடன் அந்தக் கட்சியின் இரண்டு பதவிகளுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயல்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளராக முன்னாள் கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதங்கள், கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவால் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
18.05.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 04

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது யுக புராணம் பாடும் காலமல்ல?

இது முள்ளிவாய்க்காலை நினைவுகூரும் 14ஆவது வருடம். முள்ளிவாய்க்காலை நினைவு கொள்வது, யுத்தத்துக்குள் அகப்பட்டு மரணித்த மக்களின் உறவுகளுக்கு உணர்வூர்வமான நாட்கள். யுத்தத்துக்குள் அகப்பட்டு தப்பித்துக் கொண்ட மக்களுக்கோ தாங்கள் பிழைத்துக் கொள்வதற்காக அலைந்த நாட்களின் நினைவுகளை மீட்டுக்கொள்ளும் நாட்கள். ஆனால், அரசியல் சமூகத்தினருக்கும் புத்திபூர்வமான சமூகம் ஒன்றுக்கும் இது வெறும் உணர்வுபூர்வமான விடயம் மட்டுமல்ல, விடயங்களை அறிவுரீதியாக எண்ணிப் பார்ப்பதற்கான நாட்களாகும்.

யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுமே யுத்தத்தின்மீதான பிடியை தாங்கள் இழந்துவிடக்கூடாதென்னும் இலக்கிலேயே இறுதிவரையில் செயல்பட்டனர். இது யுத்தத்தின்போதான பொதுப் போக்குத்தான். ஆனால், இரண்டு தரப்புகளுமே வெற்றிக்கான யுத்தத்தை தெரிவுசெய்யும்போது, யுத்தத்தை நிறுத்தும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. உலகத்தை பொறுத்தவரையில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை புரிகின்றது.

அது ஓர் இறைமையுள்ள நாட்டின் விவகாரம். அதற்குள் நாம் தலையிட முடியாது. பலம்பொருந்திய நாடுகள் யுத்தங்களுக்குள் சிக்குண்டுபோகும் சிறிய நாடுகளை இவ்வாறுதான் சாதாரணமாகக் கைகழுவிச் சென்றுவிடுகின்றன. ஆப்கானிஸ்தானில் 20 வருடங்கள் நிலைகொண்டிருந்த அமெரிக்க படைகள் எந்த தலிபான்களை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றியதோ அதே தலிபான்களிடம் நாட்டை விட்டுவிட்டு வெளியேறிவிட்டன. அந்த சந்தர்ப்பத்தில் ஓர் ஊடகவியலாளர் அமெரிக்க ஜனாதிபதி பைடனிடம் கேட்கின்றார் – “ஆப்கானிஸ்தான் மக்களை கைவிட்டுவிட்டீர்களே…” – அதற்கு பைடனின் பதில் – “ஆப்கானியர்களுக்கே ஆப்கானிஸ்தானில் அக்கறையில்லாவிட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும்? – அவர்களுக்காக அமெரிக்க படைகள் செத்துக் கொண்டிருக்க முடியாது.”, இதுதான் பலம்பொருந்திய சக்திகளின் பதில். இதில், நாம் அதிர்ச்சியடைய ஒன்றுமில்லை.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வன்னியிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளையும் அங்கிருந்த அரசுசாரா நிறுவனங்களையும் வெளியேறுமாறு கூறியதைத் தொடர்ந்து அனைவரும் உடனடியாக வெளியேறி விட்டனர். அங்குள்ள மக்கள் தொடர்பில் எவரும் அக்கறை காண்பிக்கவில்லை – அவர்களால் காண்பிக்கவும் முடியாது. ஏனெனில், ஓர் அரசாங்கம் உங்களின் உயிருக்கு உத்தரவாதமில்லை என்றால் அதன் பின்னர் எவரும் யுத்த வலயத்துக்குள் இருக்க முடியாது.

இதுதான் யதார்த்தம். இந்தப் பின்னணியில்தான் வெற்றிக்கான சண்டையில் இலங்கை இராணுவம் இறுதியில் அவர்களுக்கான வெற்றியை ஈட்டியது. இறுதி யுத்தத்தின்போது, வெற்றிக்காகப் போரிட்ட இரண்டு தரப்புகளும் எவ்வாறு செயலாற்றின என்பது தொடர்பில், அந்த சமயம் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ் இறுதி யுத்த அனுபவங்களை தொகுத்து, ‘கூண்டு’ – என்னும் தலைப்பில் நூலொன்றை வெளியிட்டிருக்கின்றார். அதில், இரண்டு தரப்புகளின் குற்றங்கள் தொடர்பிலும் பேசியிருக்கின்றார் – இரண்டு தரப்புகளுமே எவ்வாறு மக்களை காப்பாற்றுவதில் அக்கறையற்றிருந்தனர் என்பதைப் பற்றி பேசியிருக்கின்றார்.

பின்னர் கோடன் வைஸ் அமெரிக்காவின் புகழ்பெற்ற வெளிவிவகார சஞ்சிகையான, ‘பொறின்பொலிசி’யில் ‘புலிகளின் இரத்தம்’ என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார் – அதில், “புலிகள் இல்லாத உலகம் முன்னரைவிடவும் சிறப்பாக இருக்கின்றது”, என்று எழுதினார். இன்று, 14 வருடங்கள் கழித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முள்ளிவாய்க்கால் நிகழ்வில் அவர் பேருரை ஆற்றவுள்ளார். நாடுகடந்த அரசாங்கம் மாற்றங்களை புரிந்துகொண்டு விட்டதா?

அறிவின் துணையுடன் உலகை புரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணும் – முயற்சிக்கும் தமிழ் சமூகத்தின் முன்னேறிய பிரிவினருக்கு இந்த நாட்கள் ஒருபோதும் யுகபுராணம் பாடும் அல்லது கவிதைகள் எழுதி மனதைத் தேற்றும் நாட்களல்ல. நாம் எங்கு வீழ்ந்து போனோம்? – ஏன் வீழ்ந்து போனோம்? – ஏன் நம்மை யாரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை? இந்த 14 வருடங்களில் ஏன் நமது முயற்சிகள் எவையுமே குறிப்பிட்டு சொல்லக்கூடிய வெற்றியை பெறமுடியவில்லை? உண்மையில், நமது அரசியல் எங்கு சிக்குண்டு போயிருக்கின்றது? இவ்வாறான கேள்விகளின் வழியாக கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்வது பற்றியே சிந்திக்க வேண்டும்.

# கிளிநொச்சியில் பல இடங்களிலும் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வு

*கிளிநொச்சி, மே 18*

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையை நினைவேந்தும் விதமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் பல பகுதிகளிலும் நடைபெற்றது.

வாடகை வாகன உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் டிப்போ சந்தியில் உணர்வுபூர்வமாக அஞ்சலி நிகழ்வும், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் நேற்று நடந்தது. இந்த நிகழ்வுகளில் பலர் பங்கேற்றனர்.

இதேவேளை, கிளிநொச்சி பேருந்து நிலையம் முன்பாக வர்த்தகர்களின் ஒழுங்குபடுத்தலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

மேலும், கிளிநொச்சி மருத்துவமனை முச்சக்கர வண்டி தரிப்பிட உரிமையாளர்களின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரித்து வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்விலும் பலர் கலந்து கொண்டனர். கிளிநொச்சி மாவட்டத் தின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி தயாரித்து வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2024 புதிய பாடத் திட்டத்தில் ஐ. சி. ரி, செயற்கை நுண்ணறிவு

## கல்வி அமைச்சு அறிவிப்பு

*கொழும்பு, மே 18*

2024ஆம் ஆண்டிலிருந்து தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (ஐ.சி.ரி), செயற்கை நுண்ணறிவுஆகிய இரு புதிய பாடங்களை பாடத்திட்டத்தில் அறிமுகப் படுத்தவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களுக்கு இந்தப் பாடங்கள் கற்பிக்கப்படவுள்ளன.

சர்வதேச தரத்துக்கு இணையாக நாட்டின் கல்வித் தரத்தை மேலும் உயர்த்தும் முயற்சியில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதம் இதற்கான முன்னோடி நிகழ்வுகள் தெரிவு செய்யப்பட்ட 20 பாடசாலைகளில் நடைபெறும். மாணவ சமுதாயத்தில் ஆங்கில மொழிப் பயன்பாட்டை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

‘STEAM’ கல்வி முறையைச் செயல்படுத்துவதன் மூலம் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், மாணவர்கள் ஆண்டு இறுதித் தேர்வுகளுக்கு பதிலாக தொகுதி அடிப்படையிலான முறையைப் பின்பற்ற முடியும். அதன்மூலம் அவர்கள் சிறந்த செயல்திறனைக் காட்ட முடியும்.

இந்த ‘STEAM’ கல்வி முறையைச் செயற்பாட்டின் மூலம் புத்தகங்களில் பாடமாக கற்பவற்றை வகுப்பறைக்கு வெளியிலும் நடைமுறை வாழ்வில் பயன்படுத்திக் கொள்ளமுடியும் - என்றும் அமைச்சர் கூறினார்.

(ஐ)

# கோவிட் 19 தொற்று பரவல்; நடைமுறைகளை பின்பற்றுக!

## பொது சுகாதார பரிசோதகர்கள்

*கொழும்பு, மே 18*


கோவிட்-19 வைரஸ் உட்பட பல்வேறு வகையான வைரஸ்கள் பரவுவதைத் தடுக்க, முன்னர் அறிவிக்கப்பட்ட சுகாதார பரிந்துரைகளை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் நேற்று அறிவித்தது.

தற்போது, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் கோவிட் - 19 வைரஸ் நோயாளர்கள் நாடு முழுவதும் பதிவாக தொடங்கியுள்ளதுடன், அரசாங்க தகவல் திணைக்களம் கோவிட் - 19 இறப்புகளின் எண்ணிக்கை குறித்து தினசரி அறிவிப்பை வெளியிட்டு வருகிறது.

சில வகையான வைரஸ்கள் மற்றும் மர்மமான கோவிட் தொற்றுகள் பரவுவதை அண்மைக் காலங்களில் அவதானிக்க முடிகிறது. பாடசாலை போன்ற அமைப்புகளில் இவ்வாறான வைரஸ்கள் அதிகமாக பரவுகின்றன.

எனவே, முகக்கவசம் அணிதல், கைகளை கழுவுதல், பொதுக்கூட்டங்களைத் தவிர்த்தல் போன்ற கோவிட் - 19சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றும் போது மக்கள் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும்“ என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. புது முதலீடுகளை தவிர்க்கவும். அவமானம் வந்து நீங்கும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வாகனம் தொந்தரவு தரும். உடல் அசதி சோர்வு வந்து விலகும். சக ஊழியர்களால் பிரச்னை வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**
உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் பேசுவீர்கள், செயல்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி, வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். மனநிறைவு கிட்டும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி வரும். அதிகாரிகள் புரிந்து கொள்வார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சமங்களைப் புரிந்து கொள்வீர்கள். புதிய பொறுப்பு களை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக இருப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களுக்குப் பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பிரார்த்தனையை குடும்பத்தினருடன் சேர்ந்து நிறைவேற்றுவீர்கள். வேலையாட்கள் கடமையு ணர்வுடன் செயல்படுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழையகடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சலுகைகள் கிடைக்கும். தடைகளை தாண்டி வெல்லும் நாள்

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சமங்களைப் புரிந்து கொள்வீர்கள். புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
கடந்த 2 நாட்களாக இருந்து வந்த மனஉளைச்சல் நீங்கி மகிழ்ச்சி கிட்டும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். புது வாய்ப்புகள் தேடி வரும். நன்மை கிட்டும் நாள்.

# ஆளும் தி. மு. கவுக்கு எதிராக போராட தயாராகும் அ. தி. மு. க.

## கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு

சென்னை, மே 18

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவானதை உச்சநீதிமன்றம் ஏற்ற நிலையில், இந்திய தேர்தல் ஆணையமும் அ.தி.மு.க.வின் பொதுக்குழு தீர்மானங்களை அங்கீகரித்துள்ளது.

இந்த நிலையில், அ. தி. மு. க. கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நேற்று நடந்தது. இதில், ஒன்றரை கோடியாக உள்ள தொண்டர்கள் எண்ணிக்கையை 2 கோடியாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது.

அத்துடன், அ.தி.மு.க. மாநாட்டை பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னோட்டமாக கட்சியின் பலத்தை காட்டும் வகையில் மிக பிரமாண்டமாக மாநாடாக நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதேநேரம், தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத்துக்கு 22 பேர் பலியான நிலையில் கள்ளச்சாராயத்தை தடுக்க தவறிய தி.மு.க. ஆட்சியை கண்டித்து அ.தி.மு.க. மாவட்டம் தோறும் போராட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளது. (ஐ)

# அ. தி. மு. க. போராடினால் ஆதரவு வழங்கத் தயார்!

## தி. மு. க. கூட்டணியின் திருமாவளவன்

விழுப்புரம், மே 18

எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மதுவை ஒழிக்க போராட்டம் நடத்தினால் அவருக்கு ஆதரவாக நாங்கள் குரல் கொடுக்க தயாராக உள்ளோம் என்று ஆளும் தி. மு. க. கட்சியின் கூட்டணியான விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் எம். பி. குறிப்பிட்டார்.

கள்ளச்சாராயம் அருந்திஉடல்நலம் பாதிக்கப்பட்டவர்களை நேற்று சந்தித்து பேசிய பின்னர் அவர் செய்தியாளர் களிடம் கூறியவை வருமாறு,

விடுதலை சிறுத்தைகள் கட்சியை பொறுத்தவரை பூரணமதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். தேசிய அளவில் மதுவிலக்கு கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அரசு மதுவிலக்கு கொள்கையை தீவிரமாக நடைமுறைப்படுத்தாதவரை கள்ளச்சாராய விற்பனையை தடுக்க முடியாது.

அரசே மது வணிகத்தை நடத்துவது ஏற்புடையதல்ல. கள்ளச்சாராய விற்பனை குறித்து அரசு கண்டும் காணாமல் இருப்பது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

தற்போது எதிர்க்கட்சி தலைவராக இருக்கக் கூடிய பழனிசாமி மதுவை ஒழிப்பதற்காக எங்காவது போராட்டம் நடத்தி இருக்கிறாரா? இனி அவர் மதுவை ஒழிக்க போராட்டம் நடத்துவார் என்றால் அவரோடு சேர்ந்து நாங்கள் குரல் கொடுக்க தயாராக உள்ளோம் - என்றார். (ஐ)

# லைகா நிறுவனத்தின் 8 இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை!

சென்னை, மே 18

சென்னையில் லைகா நிறுவனம் தொடர்புடைய 8 இடங்களில் வருமான வரித் துறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சோதனை நடத்தினர். இதில் முக்கிய ஆவணங்கள் சிக்கின என்று கூறப்படுகிறது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர் சுபாஸ்கரன் அல்லிராஜா. இவர் 'ஹலைகா மொபைல்' என்ற தொலைத் தொடர்பு நிறுவனத்தை நடத்துகிறார். இவர் திரைப்பட தயாரிப்பையும் இந்தியாவில் செய்து வருகின்றார்.

தமிழின் பிரமாண்ட தயாரிப்பான பொன்னியின் செல்வன் உட்பட 15 திரைப்படங்களை லைகா தயாரித்துள்ளது. இவற்றின் மூலம் லைகா நிறுவனம் அதிக இலாபம் ஈட்டியதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், லைகா படத் தயாரிப்பு நிறுவனம், சட்ட விரோதப் பணப் பரிவர்த்தனையில் ஈடுபட்டதாக முறைப்பாடு எழுந்தது. அதனடிப்படையில், அமலாக்கத் துறை அதிகாரிகள் அந்த நிறுவனத்துக்கு சொந்தமான 8 இடங்களில் நேற்று சோதனை மேற்கொண்டனர்.

வேறு இடங்களிலும் நடைபெறும் சோதனைகள் நிறைவடைந்த பின்னரே கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தமிழ்நாடு அரசாங்கம் படிப்படியாக மதுவிலக்கை அமுலாக்க வேண்டும்!

## வைகோ வலியுறுத்து

சென்னை, மே 18

அரசு மதுபான விற்பனைக் கடைகளை படிப்படியாகக் குறைத்து, முழு மதுவிலக்கை செயல்படுத்த வேண்டும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழகத்தில் கள்ளச் சாராயத்தால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 22ஆக அதிகரித்திருப்பது அதிர்ச்சி தருகிறது.

அரசு விற்பனை செய்யும் மதுவைப் போன்றே கள்ளச்சாராய புட்டிகள் புழக்கத்தில் இருப்பதும், அதனைக் கண்டறிந்து தடுக்க வேண்டிய பொலிஸாரின் அலட்சியத்தாலும் இது போன்ற உயிரிழப்புகள் நேர்கின்றன. கள்ளச்சாரயம் விற்பனை செய்வோரை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.

அதனை தடுக்கத் தவறிய பொலிஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். கள்ளச்சாரயம் அருந்தி, மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோரை முதல்வர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, தக்க சிகிச்சை மேற்கொள்ள ஆணையிட்டு உள்ளது ஆறுதல் தருகிறது. இனி இது போன்ற துயர நிகழ்வுகளுக்கு இடம் இல்லாத நிலையை அரசு உருவாக்க வேண்டும்.

அரசு மதுபான விற்பனைக் கடைகளை படிப்படியாகக் குறைத்து, முழு மதுவிலக்கை செயல்படுத்த வேண்டும் என்பதுதான் மதிமுக தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையாகும்" - என்றார்.

# தனது படைகள் செய்த அட்டூழியங்களை தொடர்ந்து மறுத்துவரும் இலங்கை அரசு!

## சாடுகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, மே 18

**இலங்லையில் போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகும், நீதி வழங்கப்படவில்லை. மாறாக இலங்கை அரசு தனது படைகள் செய்த அட்டூழியங்களை மறுத்து வருகிறது என குற்றம்சாட்டியுள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.**

2009 இல் முடிவடைந்த நாட்டின் கொடூரமான உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இறந்தவர்களை நினைவு கூரும் மே 18 தொடர்பில், மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் 'தாக்குதலற்ற வலயங்கள்' என்ற இடங்களை அறிவித்து பொதுமக்கள் அங்கு சென்ற பின்னர் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர், அரசாங்கப் பாதுகாப்புப் படையினரிடம் பிடிபட்ட ஏராளமான போராளிகள் மற்றும் சிவிலியன் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் சட்டத்திற்கு புறம்பாக கொல்லப்பட்டனர் அல்லது பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பகம் நினைவூட்டியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்ஷி கங்குலி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகும், நீதி வழங்கப்படவில்லை மாறாக இலங்கை அரசு தனது படைகள் செய்த அட்டூழியங்களை மறுத்து வருகிறது. காணாமல் போனவர்களின் தாய்மார்கள், தங்கள் அன்புக்குரியவர்களின் தலைவிதியை அறிய தொடர்ந்து முயன்று வரும் ஒரு குழுவினர், பாதுகாப்புப் படையினரின் துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர்.

காணாமற்போனோரைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் எந்த முன்னேற்றமும் அடையவில்லை.

மோதலின்போது, சித்திரவதை, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சிறுவர் படையினரைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட எண்ணற்ற உரிமை மீறல்களை இரு தரப்பினரும் மேற்கொண்டனர்.

26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின்போதும் அதற்குப் பின்னரும் நடந்த பாரதூரமான உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தீவிரமாக விசாரித்து உரிய முறையில் தண்டிக்கத் தவறிவிட்டதாக ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள், மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் பிற மனித உரிமை அமைப்புகள் நீண்டகாலமாக இலங்கை நிர்வாகங்களை விமர்சித்து வருகின்றன.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சில அரச அதிகாரிகள் அரசியல் ரீதியாக பலம் வாய்ந்தவர்களாக அல்லது இலங்கை இராணுவத்தில் உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

தமிழர்களுக்குச் சொந்தமான அல்லது இந்துக் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை அதிகாரிகள் கைப்பற்றுவது அல்லது வைத்திருப்பது தொடர்கிறது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையை தொடர அரசாங்கம் விரும்பாததால், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் வேறு இடங்களில் நீதியைப் பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இலங்கை மற்றும் வெளிநாட்டு நீதித்துறை அதிகாரிகளின் 'கலப்பின' செயல்முறையை திட்டமிடும் முந்தைய ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கம் விலகிய பின்னர், எதிர்கால வழக்குகளில் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களை சேகரிக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஒரு பொறுப்புக்கூறல் திட்டத்தை நிறுவியது.

இந்தநிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை' உருவாக்குவதற்கு முன்மொழிந்தார்.

ஆனால் முந்தைய அனைத்து உள்நாட்டு ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது நீதிக்கான முயற்சிகளை ஊக்குவிப்பதை விட ஓரங்கட்டுவதற்கான ஒரு வழியாகும்.

எனவே இலங்கை அரசாங்கம் முட்டுக்கட்டை போடுவதை நிறுத்திவிட்டு, பலர் பாதிக்கப்படும் பாரதூரமான மீறல்களை விசாரித்து வழக்குத் தொடர வேண்டிய கடமையை நிறைவேற்ற வேண்டும்.

அது வரை, இலங்கையில் வெளிநாடுகளில் நீதியை தீவிரமாக தொடர ஐக்கிய நாடுகளின் பொறுப்புக்கூறல் திட்டத்துடன் ஏனைய நாடுகள் இணைந்து செயற்படவேண்டும்-என்றார்.

# சிறுபான்மையினருக்கு எதிரான மதத்துன்புறுத்தல் தொடர்கிறது!

## அமெரிக்கா சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 18

2022ஆம் ஆண்டு, இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான மதத்துன்புறுத்தல்கள் குறித்து, மதங்கள் தொடர்பான தமது வருடாந்த சுயாதீன அறிக்கையில் அமெரிக்கா தகவல்களை வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில், இன, மத அடிப்படையில், சிறுபான்மையினரை மதித்து, நல்லிணக்கச் செயற்பாட்டின் ஒரு அங்கமாக மதச் சுதந்திரத்தை உள்ளடக்க வேண்டியதன் அவசியத்தை, இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடனான சந்திப்புகளின்போது, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம், வலியுறுத்தியதாக அமெரிக்காவின் வருடாந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், நீண்ட காலமாக தடுப்புக்காவலில் உள்ளவர்களுக்கு, குறிப்பாக காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நடைமுறையை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக, இலங்கைக்கு வருகைதந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# ஜனாதிபதி நோட்டீஸ் கொடுத்தால் உடனடியாக வெளியேறவேண்டும்!

## கூறுகின்றார் தென் மாகாண ஆளுநர்

கொழும்பு, மே 18

ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கும் வரையில் மட்டுமே ஆளுநர்கள் பதவியில் இருக்கமுடியும் எனவும் அதனை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாதெனவும் தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே தெரிவித்தார்.

ஆளுநர் பதவியை ராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி நோட்டீஸ் கொடுத்தால் உடனடியாக வெளியேறவேண்டும் எனவும் அவ்வாறு அறிவித்த பின்னர் ஆளுநர் பதவியில் இருக்க எவருக்கும் உரிமை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் விருப்பத்திற்கு மாறாக ஒரு நிமிடம் கூட ஆளுநர் அலுவலகத்தில் இருக்க ஆளுநருக்கு உரிமை இல்லை. ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

ஜனாதிபதி தனது கையொப்பத்தின் கீழ் அல்லது அதிகாரக் கடிதத்தின் கீழ் ஆளுநரை நியமிக்கவேண்டும். இதுவே அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளதாகவும் தென் மாகாண ஆளுநர் கலாநிதி வில்லி கமகே கூறினார்.

(அ)

# சீனாவின் யுனான் மாகாண ஆளுநர் இலங்கை வருகை

## திருகோணமலை உள்ளிட்ட பல இடங்களுக்கு விஜயம்

கொழும்பு, மே 18

சீனாவின் யுனான் மாகாண ஆளுநர் வாங் யூபோ இலங்கை வந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு இலங்கை வந்த அவர் தனது 5 நாள்விஜயத்தின்போது கொழும்பு, கண்டி, பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்யவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

வாங்கின் விஜயத்தின்போது யுனான் மக்கள் அரசாங்கத்தின் வெளியுறவு அலுவலகத்துக்கும் இலங்கையின் வெளிவிவகாரத் திணைக்களத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளார்.

இது தொடர்பான முன்மொழிவுக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனான் மக்கள் தொகை 5 கோடியாகும். அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 417 பில்லியன் டொலர்களாகும்.

அத்துடன், யுனான் இலங்கையுடன் வரலாற்று ரீதியான நட்புறவையும் கொண்டுள்ளதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

# கோவிட் பரிசோதனைகள் இன்மையால் மக்களுக்கு பெரும் சுகாதாரப் பிரச்சனை

## பொது பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 18

கோவிட் நோயாளர்களை கண்டறியும் பரிசோதனைகள் பரந்த அளவில் மேற்கொள்ளப்படாமையால் பொதுமக்கள் பாரிய சுகாதார பிரச்சனையை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்ததுடன், தமது சொந்த வாழ்க்கையின் பாதுகாப்பிற்காக மீண்டும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுமாறு மக்களை கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாதாரண மட்டத்தில், சில வைரஸ் நோய்கள் மற்றும் கோவிட் -19 என்று சந்தேகிக்கக்கூடிய ஒரு நோய் பெரிய அளவில் பரவுகிறது. பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களில் இது ஒரு தொற்றுநோயாக பரவுகிறது.

எனவே பொதுமக்களாகிய நாம் இந்த தருணத்தில் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

குறிப்பாக கோவிட்-19 நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நாம் முன்னர் அறிமுகப்படுத்திய சுகாதார ஆலோசனைகள், குறிப்பாக கைகளைச் சுத்தமாக வைத்திருப்பது மற்றும் சுவாச மண்டலத்தின் சுகாதாரத்தை பராமரிப்பது ஆகியவை மிகவும் முக்கியமானவை.

குறிப்பாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் வெளியே செல்லாமல் இருப்பதும், முகக்கவசம் அணிவதை கட்டாயமாக்குவதும் உங்கள் ஆரோக்கியத்தையும் உயிரையும் பாதுகாக்க உதவும்-என்றார்.

(அ)

# வடக்கு-கிழக்கு ஆளுநர்களின் நியமனம் நல்லிணக்கத்துக்கான சிறந்த சமிக்ஞை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, மே 18

**தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரே தடவையில் தமிழ் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையானது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும். அதேபோல நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சமிக்ஞையையும் இதன்மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று ஆளுநர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் பேசும் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்கு தமிழ் ஆளுநர்களை நியமிக்குமாறு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். மக்களின் கோரிக்கையும் அதுவாகவே இருந்தது. அந்த கோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்றியமை வரவேற்கதக்கது.

வடக்கு மாகாணத்தில் தமிழ் ஆளுநர்கள் பதவி வகித்தபோதும் கிழக்கு மண்ணுக்கு முதன் முறையாக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டமையும் மகிழ்ச்சி. அதுவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அந்த பதவிக்கு வந்திருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக அமைந்துள்ளது.



நாட்டில் மாகாணசபைகளில் தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எனவே, நிர்வாகம் என்பது ஆளுநர் வசமும், பிரதம செயலாளர்கள் வசமும்தான் உள்ளன. எனவே, கிழக்கு மாகாணத்தில் சிறந்த சேவையை புதிய ஆளுநர் வழங்குவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அவர் மூலம் சிறந்த சேவையை பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

செந்தில் தொண்டமான் மாகாணசபை உறுப்பினராக, அமைச்சராக, பதில் முதல்வராக பதவி வகித்துள்ளார். ஆக மத்திய அரசுக்கும், மாகாண அரசுக்கும் இடையில் ஏற்படும் நெருக்கடிகளை எப்படி சமாளிப்பது என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆகவே, சிறப்பான சேவைகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது.-என்றார். (அ)

# விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் பௌத்த சின்னங்கள் பேணப்பட்டன!

## கூறுகின்றார் வேலன் சுவாமி

கொழும்பு, மே 18

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்திலும் பௌத்த சின்னங்கள் பேணப்பட்டன என்று சிவ குரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கில் இப்போது ஆக்கிரமிப்பு செய்யப்படும் பகுதிகளில் பௌத்தர்கள் இல்லை.

இலங்கை அரசாங்கத்தின் இயந்திரங்களாகிய சிங்கள இராணுவத்தினர், சிங்கள பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகள் அங்கிருந்து வழிபடுவதற்காக பௌத்த கட்டுமானங்கள் உருவாக்கப்படுகின்றதே தவிர பூர்வீகமாக சிங்கள பௌத்தர்கள் வாழ்கின்ற இடங்கள் என்று எதுவுமே கிடையாது.

வடக்கு - கிழக்கில் பூர்வீகமாக பௌத்தர்கள் வாழ்ந்தால், அங்கு வழிபாட்டுக்காக தாங்களாகவே விரும்பிச் சட்ட திட்டங்களுக்கமைய விகாரை கட்டி வழிபடலாம். அதற்கு நாங்கள் எந்த விதத்திலும் ஆட்சேபனை தெரிவிக்க போவதில்லை.

தென்னிலங்கையில் கோவில் உள்ளது என்றொரு கருத்து உள்ளது. அங்கு தமிழ் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். அவர்கள் சட்டத்திட்டத்திற்குட்பட்டு ஆலயங்களை அமைத்துள்ளனர். அதன் நோக்கம் வழிபாடே தவிர ஆக்கிரமிப்பு அடாவடித்தானம் கிடையாது-என்றார். (அ)

# நாடு திரும்பியதும் போதகரான ஜெரோம் கைது செய்யப்படுவார்

கொழும்பு, மே 18

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மே 14 ஞாயிற்றுக்கிழமை நாட்டை விட்டு வெளியேறியதாகவும், நாடு திரும்பியதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்படுவார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இவ்வாறு இருக்க, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தாயகம் திரும்பவுள்ளதாக போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தனது அதிகாரபூர்வ இன்ஸ்டாகிராம் கணக்கில் ஒரு குறிப்பை வெளியிட்டுள்ளார்.

அத்தியாவசிய தொழில் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியதாகவும், ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்புவதாகவும் அவர் அதில் கூறியுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு போதகர் ஜெரோம் பெர்னாண்டோ ஆற்றிய பிரசங்கம் சமூக ஊடகங்களில் பரவியது.

அது சமூகத்தின் பல்வேறு பிரிவுகள், புத்தர் மற்றும் பிற மத நம்பிக்கைகளை அவமதிப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து போதகருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பல தரப்பினரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்தனர்.

அத்துடன், போதகரின் வாக்குமூலங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார். (அ)

# ஒரேநாளில் 400இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர் அடையாளம்

கொழும்பு, மே 18

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 412 டெங்கு நோயாளர்கள் நேற்று முன் தினம் பதிவானதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், டெங்கு காய்ச்சலினால் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டு 19 ஆவது வார நிறைவில், 1294 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்ததாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், இந்த வருடத்தின் 19ஆவது வார நிறைவில் 2029 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நேற்று பதிவான 412 டெங்கு நோயாளர்களில் 261 பேர் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களாவர். இவர்களில் 132 பேர் கொழும்பை சேர்ந்தவர்கள். கம்பஹா மாவட்டத்தில் 98 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதனிடையே, டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் புகைக்கான இரசாயனம், போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# வரணி மத்திய கல்லூரியில் புனரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், மே 18

வரணி மத்திய கல்லூரியின் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியை கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்த குமார் நேற்று திறந்துவைத்தார்.

1954 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதி, வரணி ஒன்றியத்தின் 5 மில்லியன் ரூபா நிதியுதவியில் இராணுவத்தின் பங்களிப்புடன் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த கட்டடத் தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதொட்ட,



வரணி ஒன்றியத் தலைவர் தம்பு செல்வகுமார் ஆகியோர் விருந்தினராக கலந்து சிறப்பித்தனர். (அ)

# மின்சார இயந்திரங்களின் பற்றரிகளை திருடிய தனியார் பஸ் நடத்துநர் கைது!

கொழும்பு, மே 18

கொழும்பை சூழவுள்ள பல்பொருள் விற்பனை நிலையங்களின் மின் உற்பத்தி இயந்திரங்களில் பொருத்தப்பட்ட பற்றரிகளை திருடும் தனியார் பஸ் நடத்துநர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார் என கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், திருடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சுமார் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான 10 பற்றரிகள் மற்றும் திருடுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஓட்டோ என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பைச் சூழவுள்ள பல்பொருள் விற்பனை நிலையங்களின் மின் உற்பத்தி இயந்திரங்களில் பொருத்தப்பட்ட மின்கலங்கள் திருடுவது தொடர்பில் பல பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது தொடர்பில் கொழும்பு தெற்கு பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹசந்த மாரப்பன, பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றுமொரு விசாரணையை ஆரம்பித்துள்ளனர். (அ)

# குடத்தனை கிழக்குப் பகுதி சுடலைக்குள் மணல் அகழ்வு

## ஒருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மே 18

குடத்தனை கிழக்கு சுடலைக்குள் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குடத்தனை கிழக்கு சுடலைக்குள் மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு இளைஞர்களால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த பகுதியில் மணல் ஏற்றிய டிப்பர் ரக வாகனம் கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பருத்தித்துறை பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# அனைத்து மதங்களின் உரிமைகளும் கிழக்கு மாகாணத்தில் காக்கப்படும்!

## புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் கருத்து

கொழும்பு, மே 18

**கிழக்கு மாகாணத்தில் அனைத்து மதங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நேற்று நியமிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.**



நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவி ஏற்ற பின்னர் அவர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த காலத்தில் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களைப் போன்று கிழக்கு மாகாணத்திலும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் குறிப்பிட்டார். (அ)

# மிருகக்காட்சிச்சாலை கட்டணங்களில் திருத்தம்

கொழும்பு, மே 18

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்துக்குச் சொந்தமான தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் ரிதியகம சபாரி பூங்கா ஆகியவற்றுக்கான கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, அனைத்து உயிரியல் பூங்காக்களிலுமுள்ள மாமிச உண்ணி விலங்குகளுக்கு உணவு வழங்குவதற்கான கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் அனகொண்டாக்களுடன் படம் எடுப்பதற்கான கட்டணம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரிதியகம சபாரி பூங்காவில் குளிரூட்டப்பட்ட பஸ்களின் கட்டணம் 150 ரூபாவாகவும், ரிதியகம சபாரி பூங்காவில் குளிரூட்டப்படாத பஸ்களின் கட்டணம் 100 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# சப்ரகமுவ மாகாண ஆளுநராக நவீன் மிகவிரைவில் நியமனம்?

கொழும்பு, மே 18

ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தரும், முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க, சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார்.

தற்போதைய ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ வெளிநாடு சென்றிருப்பதால், அவர் நாடு திரும்பிய பின்னர் புதிய நியமனம் இடம்பெறும் என தெரிய வருகின்றது.

நான்கு மாகாணங்களுக்கான ஆளுநர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தார்.

இதன்படி மூன்று மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நேற்று நியமிக்கப்பட்டனர்.

இதன்படி, வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இதனை அடுத்து சப்ரகமுவ மாகாண ஆளுநராக நவீன் திஸாநாயக்க நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# டெங்கு நுளம்புகளை உற்பத்தி செய்யும் இடங்களாக 60 வீதமான பாடசாலைகள்

கொழும்பு, மே 18

தற்போது நிலவும் மழையுடனான காலநிலையுடன் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரித்துள்ளது.

நாட்டிலுள்ள 60 வீதமான பாடசாலை வளாகங்களில் டெங்கு நுளம்பு குடம்பிகள் காணப்படுவதாக அந்த பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 65 வீதம் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் 65-70 வீதம் பாடசாலைகளில் இவ்வாறான நுளம்பு காணப்படுவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் நிபுணர் சதீர மாரசிங்க தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு அருகாமையில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அழிப்பதில் விசேட கவனம் செலுத்துமாறு அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். (அ)

# சுற்றுலா பயணிகளில் இந்தியர்களே அதிகம்!

கொழும்பு, மே 18

இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் 36 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட அண்மைய தரவுகளின் படி, இம்மாதத்தில் மட்டும் இதுவரை 36,100 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இவ்வாறு வந்த சுற்றுலாப் பயணிகளில் இந்தியர்களே அதிகம் என்றும் மொத்தமாக 9 ஆயிரத்து 323 இந்தியர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்யாவிலிருந்து 3,686 சுற்றுலாப் பயணிகளும், பிரித்தானியாவில் இருந்து 2,523 பேரும், ஜேர்மனியில் இருந்து 2,179 பேரும் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

இதேநேரம் அவுஸ்திரேலியாவிலிருந்து 2,075 பேரும், சீனாவில் இருந்து 1,915 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதம் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதேவேளை ஏப்ரல் மாதத்தில் மொத்தம் 105,498 சுற்றுலாப் பயணிகள் வந்ததாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் மட்டும் இதுவரை 477,277 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# டில்லியில் உள்ள சவூதி தூதுவருக்கு குர் ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பு

கொழும்பு, மே 18

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட, இந்தியாவுக்கான சவூதி அரேபியாவின் தூதுவர் சலேஹ் ஈத் அல் ஹூசைனியிடம் நேற்று முன் தினம் புனித குர்ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பின் பிரதியை வழங்கினார்.



புதுடில்லியில் உள்ள இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்களுடன் உரையாடலை மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, நேற்று முன் தினம் காலை உயர்ஸ்தானிகர் மொரகொட, புதுடில்லியில் உள்ள சவூதி அரேபியாவின் தூதரகத்தில் தூதுவர் அல் ஹூசைனியை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது, இலங்கை தூதுவர் மற்றும் சவுதி தூதுவர் ஆகியோர் இந்தியாவின் ஈடுபாட்டுடன் முத்தரப்பு பொருளாதார ஒத்துழைப்புக்கான சாத்தியம் உள்ளிட்ட பல வேறு விடயங்களை உள்ளடக்கிய கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இதன்போது, இலங்கையின் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவினால் வெளியிடப்பட்ட புனித குர்ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பு சவூதி தூதுவருக்கு வழங்கப்பட்டது.

முன்னதாக, தூதுவர் மொரகொட சிங்கள குர்ஆனின் பிரதிகளை டில்லி ஜமா மஸ்ஜித், ஜமியத் உலமா-இ-ஹிந்த் (இந்திய முஸ்லிம் இறையியலாளர்கள் சபை மற்றும் மொராக்கோ மற்றும் பஹ்ரைன் தூதுவர்கள் மற்றும் நைஜீரியாவின் தூதுவர் ஆகியோரிடம் புது டில்லியில் வழங்கினார். (அ)

# மாகாண சபை முன்னாள் உறுப்பினரின் வாகனம் மோதி தந்தை, மகன் உயிரிழப்பு!

கொழும்பு, மே 18

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தையொருவரும், அவரது மகனும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித் தனர்.

மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் பயணித்த ஜீப் ரக வாகனத்தில் மோதுண்டு இருவரும் உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

பூவெலிக்கடை - சங்கமித்த மாவத்தையைச் சேர்ந்த சந்திரிக சம்பத் ரொட்ரிகோ (வயது-41) என்ற தந்தையும், விமந்த ரொட்ரிகோ (வயது-10) என்ற அவரது மகனுமே விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

தேவையொன்றுக்காக தந்தை மற்றும் மகன் இருவரும் வீதியைக் கடக்கும்போது இவ்விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ரயில்வே வேலைநிறுத்தம் குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

கொழும்பு, மே 18

பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ரயில் வேலை நிறுத்தம் தொடர்பில் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- குறுகிய நோக்கத்துடன் ரயில் திணைக்களத்தின் வளங்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறானவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ரயில்வேயை தனியார் மயமாக்க வேண்டும் என்பதே பொது மக்களின் பொதுவான கருத்து. ஆனால் தனிப்பட்ட முறையில் எனக்கு அது பிடிக்கவில்லை. ரயில்வே துறையை ஒரு ஆணையமாக மாற்றுவதன் மூலம், இந்த நிறுவனத்தை மேம்படுத்த பல மாற்று முறைகள் பின்பற்றப்படுகின்றன. ரயில்வே சொத்துக்கள் நிர்வகிக்கப்பட்டு, கட்டணம் சரி செய்யப்பட்டு, இழப்புகள் குறைக்கப்படுகின்றன.

2024ஆம் ஆண்டு காங்கேசன் துறையில் இருந்து கொழும்புக்கு சிறந்த ரயில் சேவையை வழங்குவதற்கு எதிர்பார்க்கிறோம் -என்றார். (அ)

# டி.கே.சிவகுமார்: கர்நாடகாவில் தவிர்க்க முடியாத தலைவர் ஆனதன் பின்னணி என்ன?

இம்ரான் குரேஷி



இந்தியாவின் கர்நாடகா சட்டப்பேரவை தேர்தலில், அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க காங்கிரஸ் கட்சி தகுதி பெற்றுள்ளபோதும், அந்த கட்சியின் சட்டப்பேரவை குழு தலைவராக யாரை தேர்வு செய்யலாம் என்பதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது.

காரணம், ஏற்கெனவே மூத்த தலைவராகவும் முன்னாள் முதல்வராகவும் உள்ள சித்தராமையா ஒருபுறமும் துணை முதல்வர் பதவியை வகித்துள்ள டி.கே. சிவகுமார் தன்னை முதல்வராக்க வேண்டும் என்று மறுபுறமும் குரல் கொடுத்து வருகிறார்கள்.

இந்த விஷயத்தில் காங்கிரஸ் எம்எல்ஏக்களிடம் ரகசிய வாக்கெடுப்பை நடத்தி அதன் விவரத்தை டெல்லியில் உள்ள காங்கிரஸ் மேலிடத்திடம் கட்சியின் மேலிட பார்வையாளர்கள் குழு திங்கட்கிழமை அளித்துள்ளது. ஆனாலும், அதன் மீது காங்கிரஸ் மேலிடம் எந்த முடிவையும் இந்த செய்தி எழுதப்படும் நேரம் வரை எடுக்கவில்லை.

இந்த நிலையில், கட்சி மேலிடம் எந்த முடிவை எடுத்தாலும் அதில் தவிர்க்க முடியாதவராக டி.கே. சிவகுமார் இருப்பார் என்கிறது காங்கிரஸ் வட்டாரம்.

முதல்வர் பதவியை இரண்டரை ஆண்டுகள் பகிர்ந்து கொள்வதற்கான பார்முலாவை மேலிடம் பரிசீலித்தால் அதற்கும் தாம் தயாராக இல்லை என்று பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கர்நாடக காங்கிரஸ் தலைவர் கூறியுள்ளார். ஆனால், செவ்வாய்கிழமை டெல்லிக்கு செல்வதற்கு முன்,"நாங்கள் ஒற்றுமையாகவே உள்ளோம். எங்களிடம் 135 எம்எல்ஏக்கள் உள்ளனர். அவர்கள் என்னை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நான் பிரிவினையை விரும்பவில்லை. நான் ஒரு பொறுப்புணர்ச்சி உள்ளவன். நான் ஏமாற்றவும் மாட்டேன், மிரட்டவும் மாட்டேன்," என்று அவர் கூறினார்.



இந்நிலையில், காங்கிரஸ் மேலிட தலைமையின் அழைப்பின் பேரில் திங்கட்கிழமை டெல்லிக்கு வந்தார் சித்தராமையா. ஆனால், டி.கே. சிவகுமார் டெல்லி புறப்படவில்லை. உடல் நலக்குறைவால் தமது பயணத்தை தள்ளிப்போட்டதாகக் கூறிய சிவகுமார், செவ்வாய்க்கிழமை மாலையில் டெல்லி வந்து காங்கிரஸ் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை சந்தித்துப் பேசினார். இதைத்தொடர்ந்து காங்கிரஸ் முன்னாள் எம்.பி ராகுல் காந்தியையும் அவர் சந்தித்துப் பேச உள்ளார்.

டெல்லியில் நடக்கும் சந்திப்புகளின் மூலம் கட்சி மேலிடத்திடம் சிவகுமாருக்கு உள்ள செல்வாக்கும் அவரை தவிர்த்து விட்டு ஒரு முடிவை கட்சி மேலிடம் எடுக்க இயலாது என்பதையும் காங்கிரஸ் தலைவர்கள் நன்றாகவே உணர்ந்துள்ளனர். கர்நாடகாவில் இவரது அரசியல் வாழ்க்கை பயணம் எப்படி இருந்தது என்பதை இங்கே பார்க்கலாம்.

சரியான நேரத்தில் நல்ல உத்தியை பயன்படுத்தி தனது கனவுகளை எப்படி நனவாக்குவது என்பது டி.கே.சிவகுமாருக்கு தெரியும்.

அவரது இந்த கொள்கை அவருக்கு வெற்றியை அளித்துள்ளது. தற்போது முதல்வர் பதவிக்கான போட்டியாளர் பட்டியலில் அவரது பெயரும் இடம் பெற்றுள்ளது.

கர்நாடக சட்டப்பேரவையில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்ட எச்.நாகேஷை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்.

2019 ஜூலையில் அவர் மும்பைக்கு விமானம் ஏறுவதை தடுக்க சிவகுமார் தன்னால் இயன்ற முயற்சிகளை செய்தார்.

மதசார்பற்ற ஜனதா தளம் - காங்கிரஸ் கூட்டணியை உடைக்க ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருந்த எம்.எல். ஏக்களில் நாகேசும் ஒருவர்.

நாகேஷ் மும்பைக்கு செல்வதை சிவகுமாரால் தடுக்க முடியவில்லை.



எனவே அவர் நாகேஷை பின்தொடர்ந்து மும்பை சென்று ஹோட்டலுக்கு வெளியே நின்று கொண்டார். அங்கு தமது நண்பருடன் "ஒரு கோப்பை தேநீர்" அருந்தவும் போலீசார் அவரை அனுமதிக்கவில்லை.

**டி.கே.சிவகுமார் சுயகுறிப்பு**

முழுப்பெயர் - தொட்டலஹள்ளி கெம்பேகௌடா சிவகுமார்

வொக்கலிகா சமூகத்தைச் சேர்ந்தவர்.

கனகபுரா சட்டபேரவை தொகுதி எம்.எல்.ஏ

கர்நாடக காங்கிரஸ் கட்சியின் தற்போதைய தலைவர்

ஹெச்.டி.குமாரசாமி அமைச்சரவையில் மாநில நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

சித்தராமையா ஆட்சியில் எரிசக்தி துறை அமைச்சர்

**ஒரே இரவில் தேசிய பிரபலமான தலைவர்**

சிவகுமார் யார், அவருடைய ஆளுமை என்ன என்று ஒரே இரவில் நாடு முழுவதற்கும் தெரிய வந்தது.

அரசியல் வட்டாரங்களில் பதிவு செய்யப்படாத விஷயங்களின் மீதுள்ள திரையை சிவகுமார் அன்றைய தினம் அகற்றினார்.

"என்னிடம் ஆயுதம் ஏதும் இல்லை... நான் வெறும் இதயத்தை மட்டுமே கொண்டு வந்துள்ளேன்" என்று மும்பை பொலிஸ் அதிகாரியிடம் அவர் கூறினார்.

ஆளும் கட்சியை நேரடியாக எதிர்கொண்டதற்காக நாடு முழுவதிலும் இருந்து காங்கிரஸ் தொண்டர்களின் பாராட்டுகளைப் பெற்றார்.

"அவரது இந்த அணுகுமுறைதான், அவர் இன்று இருக்கும் நிலைக்கு அவரை கொண்டு வந்துள்ளது," என்று அவர் அரசியலுக்கு வர முயற்சித்த நேரத்தில் அவருடன் இருந்த ஒருவர், பெயர் குறிப்பிடப்படக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் எம்மிடம் கூறினார்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த போது நாகேஷை கட்சி வேட்பாளராக்குவதற்கான படிவத்தில் சிவகுமார் கையெழுத்திட்டார். நாகேஷ் மகாதேவ்புரா தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

சிவகுமாரின் மும்பை அத்தியாயத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மத்திய புலனாய்வு அமைப்புகள், அவரது கல்வி நிறுவனங்கள், பெங்களூருவில் உள்ள அவரது வீடு மற்றும் கிராமத்தில் உள்ள அவரது தாயார் வீடு ஆகியவற்றில் சோதனை நடத்தின. ஆனால் அவர் பயப்படவில்லை. இந்த சோதனைகள் அவரது அரசியல் வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டத்தில் நடத்தப்பட்டன.

குஜராத்தைச் சேர்ந்த 44 எம்.எல்.ஏ.க்களை பெங்களூரு அருகே உள்ள ஆடம்பர விடுதியில் தங்க வைத்தபோது இந்த திடீர் சோதனைகள் தொடங்கின. மாநிலங்களவை தேர்தலுக்கு முன், 'குதிரை பேரம்' நடக்காமல் தடுக்க, அவர்கள் அங்கு தங்க வைக்கப்பட்டனர்.

அப்போதைய பாஜக தலைவர் அமித் ஷாவும், காங்கிரஸ் கட்சியின் அரசியல் ஆலோசகரான அகமது படேலும் வேட்பாளர்களாக இருந்தனர்.

2002ல் விலாஸ்ராவ் தேஷ்முக்கின் ஆட்சியின் போது, மகாராஷ்டிராவின் எம்.எல்.ஏ.க்களை ஒரே இடத்தில் வைத்திருந்த அனுபவம் இங்கு அவருக்கு கைகொடுத்தது.

காங்கிரஸ் கட்சியின் இரண்டாவது மிக முக்கியமான தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக உயர் தலைமை சிவகுமார் மீது நம்பிக்கை வைத்தது.



பாஜகவில் இருந்து துணை முதல்வர் பதவியை ஏற்பதை விட, சிறை செல்வதே சிறந்தது என அவர் பலமுறை கூறினார்.

சனிக்கிழமை சட்டப்பேரவைத்தேர்தல் முடிவுகள் வந்த பிறகும் அவர் அதையே மீண்டும் சொன்னார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி திகார் சிறையில் தன்னை சந்திக்க வந்தது, தனது இதயத்தைத் தொட்டதாகக்கூறி அவர் உணர்ச்சிவசப்பட்டார்.

"சிவகுமார் சில விஷயங்களில் மிகவும் தெளிவாக இருக்கிறார். அவற்றில் ஒன்று, தன்னிடம் எப்போதும் போதுமான நிதியை வைத்துக்கொள்வது. சரியான நேரத்தில் சரியான முதலீடு செய்யுமாறு தனது நெருங்கிய உதவியாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சிலரிடம் அவர் ஆலோசனை கூறுவார்," என்று அவரது உதவியாளர் ஒருவர் பெயர் குறிப்பிடப்படக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் தெரிவித்தார்.

"சிவகுமார் முதலீடு செய்ய முடிவு செய்யும் வரை, கனகபுராவில் (அவரது சட்டப்பேரவை தொகுதி) கிரானைட் சுரங்கத்தைப் பற்றி யாருக்கும் தெரியாது. 1990களின் முற்பகுதியில் நிலத்தில் முதலீடு செய்வது ஒரு நல்ல வாய்ப்பு என்பதை அவர் உணர்ந்தார். தொழில்மயமாக்கலின் சாத்தியம் இருந்த இடங்களில் அவர் முதலீடு செய்தார். பெங்களூருவில் ஐடி மையங்கள் கட்டப்பட்ட பகுதிகள் அல்லது சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் இருந்த பகுதிகள் இதில் அடங்கும். இதில் சட்டவிரோதம் எதுவும் இல்லை," என்று மற்றொரு உதவியாளர் கூறினார்.

1980களின் பிற்பகுதியில் பெங்களூரு ரூரல் மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் சட்டப்பேரவை தொகுதியில் இருந்து தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் டிக்கெட்டை அவர் பெற்றார்.



அப்போது அவருக்கு வயது 27 மட்டுமே. 1990-ல் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.பங்காரப்பாவுக்கு மிக நெருக்கமாக அவர் ஆனார்.

**எளிதாக அமையாத அரசியல் பயணம்**

தன்னைப் போன்ற மற்ற இளைஞர்கள் மாநில அமைச்சர்களாக பதவியேற்ற போது சிவகுமார் மனமுடைந்து போனார். நீண்ட காலத்திற்குப் பிறகு மறைந்த தரம் சிங் (பங்காரப்பா அமைச்சரவையில் மூத்த அமைச்சராக இருந்தவர்) சிவகுமார், அமைச்சரவையில் சேர உதவினார். ஆனால் பங்காரப்பாவிடம் இருந்து அவருக்கு சிறைத்துறை அமைச்சர் பதவி கிடைத்தது. அது அவருக்கு ஏமாற்றத்தை அளித்தது.

1991 ஆம் ஆண்டு அரசியல் பிரவேசம் செய்த தேஜஸ்வினி கௌடாவுக்கு அவர் ஆதரவு அளித்தார். 2004 மக்களவைத் தேர்தலில் எச்.டி.தேவ கௌடாவை தேஜஸ்வினி தோற்கடித்தார்.

பின்னர் சிவகுமார், எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு நெருக்கமானவராக ஆனார். அவர் கேபிசிசி தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் 2019 இல் ஜேடிஎஸ்-காங்கிரஸ் கூட்டணி உருவானபோது கிருஷ்ணா மற்றும் தேவேகௌடாவுடன் தனது உறவை சமநிலையில் பராமரிப்பதில் அவர் வெற்றி கண்டார்.

"சாதிக் குழுக்களில் எந்தப் பிரிவினரிடமும் அவருக்கு வலுவான ஆதரவு தளம் இல்லை. ஆனால் பிரச்னைகளை எவ்வாறு கையாள்வது என்பது அவருக்குத் தெரியும். அவர் எதிரிகளிடையே நம்பிக்கையையும் பயத்தையும் தூண்டும் ஆளுமை கொண்டவர். அவரது அரசியல் போட்டியாளர்கள் கூட அவர் மாநிலத்தின் மிகவும் வளமான அரசியல்வாதி என்பதை தனிப்பட்ட முறையில் ஒப்புக்கொள்வார்கள்," என்று பாஜக தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

"ஒரு அமைச்சராக அவர் அதிகாரிகளின் பேச்சைக் கேட்பார். நிர்வாகத்தில் வரும் சிக்கல்களை எவ்வாறு கையாள்வது என்பது அவருக்குத் தெரியும்," என்று பெயர் குறிப்பிடப்படக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் ஒரு மூத்த நிர்வாக அதிகாரி கூறினார், (பிபிசி)

# நீதி கோரும் தமிழர் அரசியலின் தோல்வி?



யதீந்திரா

முள்ளிவாய்க்கால் அவலம் இடம்பெற்று 14 வருடங்கள். முள்ளிவாய்க்கால் என்பது, ஒரு ஆயுத போராட்டத்தின் தோல்வியின் விளைவாகும். இந்த பின்புலத்தில் முள்ளிவாய்க்காலை நினைவு கொள்வதென்பது, இன்னொரு வகையில் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியை, அழிவையும் நினைவுபடுத்துவதாகும். 2010இல், இந்தக் கட்டுரையாளர், பின்வருமாறு எழுதியிருந்தார். அதாவது, இலங்கையில் ஒரு மனிதப் பேரவலம் நிகழ்ந்தது பற்றி, அதிகம் எழுதி ஓய்ந்துவிட்டது. முன்வைக்கப்பட்ட கண்டனங்களும் ஏராளம்.

“அவர் - இவர் எனப் பலர் வரக்கூடும் என ஊட்டப்பட்ட நம்பிக்கைகளும் அலாதியானவை. இறுதியில் நடந்தது எதுவுமில்லை. இனி முள்ளிவாய்க்காலை நினைவு கூர்ந்து வருடங்கள் தோறும் நாம் கல்லறைகளுக்கு வெள்ளையடித்து நம் துயரை போக்கிக் கொள்ளலாம். பெரும்பாலான சந்தர்பங்களில் நம் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிரான நினைவு தினங்கள் அனைத்தும் இயலாமையின் வெளிப்பாடாக இருந்திருக்கின்றனவே தவிர செயலுக்கான அணிச் சேர்க்கையாக, செயலுக்கான முனைப்பாக இருந்ததில்லை. இந்த வரிகள் அடங்கிய கட்டுரை, ‘நீதியும் நவீன அரசியலும்’ என்னும் தலைப்பில், ‘காலத்துயரும் காலத்தின் சாட்சியும்’ என்னும் தலைப்பிலான, எனது நூலிலும் இடம்பெற்றது.

யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருடங்களில், இந்த எதிர்கூறலை தாண்டி, இன்னும் தமிழ் தேசிய அரசியல் பயணிக்கவில்லை. இது எனது எழுத்தின் வெற்றியெனலாம் ஆனால் மக்களின் நிலையில் ஒரு மோசமான தோல்வியாகும். ஏனெனில் கடந்த 14 வருடங்களில் தமிழ் தேசிய அரசியலால் முன்நோக்கி பயணிக்க முடியவில்லை. 2009இற்கு பின்னர், தமிழ் தேசிய அரசியலை தாங்கிப் பிடிப்பவர்களாக நம்பப்பட்ட அனைவருமே இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

இப்போது தமிழ் தேசிய அரசியல் முள்ளிவாய்க்கால் கஞ்சியில் திருப்தி காண்கின்றது. ஆனால் மக்களை பொறுத்தவரையில் இவற்றை சாதாரணமாக கடந்து செல்வதாகவே தெரிகின்றது. சித்திரா பருவத்திற்கு கஞ்சி குடிப்பதற்கும், இதற்கும் பெரிய வேறுபாடுகளை காண முடியவில்லை. ஏனெனில் அரசியல் தலைமையற்ற சமூகமொன்றில் எவ்வாறான நிகழ்வுகளை முன்னெடுத்தாலும் கூட, அதற்கு அரசியல் பெறுமதியிருக்கப் போவதில்லை. தமிழர் அரசியல் கடந்த காலத்தின் மீதான பரிவுணர்விற்கும், கடந்து சொல் வேண்டிய அரசியல் உண்மைகளுக்கும் இடையில் சிக்கிக் கிடக்கின்றது.

இந்த விடயத்தை பலரால் சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை, புரிந்துகொண்டவர்களால் துணிகரமாக பேசமுடியவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் 2009இற்கு பின்னரான நமது தமிழ் தேசிய அரசியல் ஆய்வுகளில் வறுமை குடிகொண்டுள்ளது. யதார்த்தங்களை எதிர்கொள்ள முடியாமல், நமது ஆய்வாளர்கள் என்போர் பலர் தடுமாறிக் கொண்டேயிருக்கின்றனர். தமது கருத்துருவாக்கங்கள் தோல்வியுற்றிருக்கின்ற என்பதையும் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதற்கு ஒரு காரணமுண்டு. எழுதுவதன் மூலம் ஒரு பிரமுக அடையாளம் கிடைத்து விடுகின்றது. பின்னர் அதனை எப்படியாவது பழுதுபடாமல் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமென்னும் ஆசையிலிருந்து விடுபட முடியாமல் இருக்கின்றது.

சாதாரண மக்களின் மனநிலை வேறு. அவர்கள் எப்போதும் உணர்சிவசப்பட்டவர்களாகவே இருப்பவர். அதிலும் முப்பது வருடங்களுக்கு மேலான யுத்தச் சூழலொன்றுக்குள் சிக்கியிருந்த மக்கள் கூட்டமொன்றில் இப்போது பலதரப்பட்டவர்கள் இருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்போர் இருக்கின்றனர். விடுதலைப் புலிகள் மீது அனுதாபமுள்ளவர்கள் இருக்கின்றனர். விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து உயிரிழந்தவர்கள் பெற்றோர்கள், உறவினர்கள் என்னுமொரு தொகுதி மக்களுண்டு. விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது கோபமும், விமர்சனமுள்ளவர்கள் இருக்கின்றனர். விடுதலைப் புலிகளை விரும்பாவிட்டாலும் கூட, பொதுவில் ஆதரவாளர்கள் போன்று நடிப்பவர்கள் இருக்கின்றனர். இவை எவற்றிலுமே அக்கறையற்று, தானுண்டு, தங்களின் வாழ்க்கையுண்டு என்றிருப்பவர்கள் இருக்கின்றனர். தமிழ் மக்களில் இவர்களே பெரும்பான்மையினரவார்.



ஆனால் யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருடங்களில் யுத்தகாலத்தின் நினைவுகளிலிருந்து அதிகமான பெரும்பான்மையான மக்கள் வெளியில் வந்துவிட்டனர். இதற்கு கடந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளே சிறந்த உதாரணம். யுத்தத்தின் அவலங்களை வைத்து அரசியல் செய்ய வேண்டிய தேவை அரசியல் கட்சிகளுக்கு இருந்தாலும் கூட, சாதாரண மக்களோ அதிலிருந்து அதிக துரத்திற்கு செல்லவே விரும்புவதாக தெரிகின்றது. கிழக்கு மாகணத்தில் இந்த நிலைமை அதிகம். இதற்கு அங்குள்ள அரசியல் மற்றும் சமூக நிலைமைகளும் ஒரு காரணமாகும்.

கடந்த 14 வருடகால அரசியல் அனுபவங்களை தொகுத்து நோக்கினால், விடுதலைப் புலிகள் தொடர்பான அரசியல் கதைகள் பெரும்பாலும் யாழ் குடாநாட்டு விடயமாக சுருங்கிவிட்டது. வடக்கு மாகாணத்தின் குறிப்பாக, யாழ் குடாநாட்டை மற்றும் கிளிநொச்சியில்



வாக்குகளை எதிர்பார்த்திருக்கும் அரசியல்வாதிகளே அவ்வப்போது விடுதலைப் புலிகளை உச்சரிப்பவர்களாக இருக்கின்றனர். அதிலும் குறிப்பாக தேர்தல் அரசியல் போட்டிக்கே இது அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாண அரசியல் உரையாடல்களை பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக தங்களை காண்பித்துக் கொள்வதில் ஒரு போட்டி இடம்பெறுகின்றது. இந்த போட்டியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கை ஓங்கிவிடக் கூடாதென்று ஏனைவர்களும், ஏனையவர்களின் கை ஓங்கிவிடக் கூடாதென்று கஜன் அணியினரும் செயற்படுகின்றனர். இதன் காரணமாகவே அவ்வபோது, நினைவேந்தல் சச்சரவுகள் இடம்பெறுகின்



றன. ஆனால் இவ்வாறான அரசியலை தங்களின் வாக்கு வங்கிக்கு தேவையில்லையென்று கருதும் அரசியல்வாதிகள் அமைதியாக இருக்கின்றனர். இவ்வாறான நினைவேந்தல் சண்டைகள், தீலிபன் சண்டை, பூபதி சண்டைகளுக்குள் அவர் ஈடுபடுவதில்லை.

ஆனால் கடந்த 14 வருடகால நீதிகோரும் அரசியலை உற்று நோக்கினால், இவர்களால் எதனையுமே சாதிக்க முடியவில்லை. இத்தனை கட்சிகள், இத்தனை புலம்பெயர் அமைப்புக்கள், இவர்களுக்குகிடையில் யார் சரியானவர்கள் என்னும் போட்டிகள், எவையும் தாயகத்தில் வாழும் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதிலோ, அரசியல் தீர்வை அடைவதிலோ குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தாக்கங்களை ஏற்படுத்தவில்லை. அண்மையில் இந்தக் கேள்வியை ஒரு புலம்பெயர் செயற்பாட்டாளர், கஜேந்திரகுமாரிடம் கேட்பதான ஒரு வீடியோ கிளிப் வெளியாகியிருந்தது. 13 வருடங்களாக எதை அடைய முடிந்தது என்று அந்த நபர் கேட்டபோது, அதற்கு கஜேந்திரகுமாரின் பதிலோ நீர் எந்ந அமைப்பு? உண்மையில் அவரின் கேள்விக்கு கஜேந்திரகுமாரிடம் பதிலில்லை. கடந்த 14 வருடகால அரசியல் நகர்வுகளை உற்றுநோக்கினால், கஜேந்திரகுமார் அணியினரின் பிரதான அரசியல் செயற்பாடாக இருந்தது, இருப்பது, ஒன்று மட்டுமே, அதாவது, மற்றவர்களை குற்றம்சாட்டுவது, மற்றவர்களுக்கு இந்திய அடிவருடிகள் முகவர்களென்று பட்டம் கூட்டுவது.

2008, இறுதி மாவீரர் தின உரையிலும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், இந்திய பேரரசுடன் உறவுகளை ஏற்படுத்த விரும்புவதாக குறிப்பிட்டிருந்தார். 2006இல், விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கம், இந்திய தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய நேர்காணல் தொடர்பில் முன்னை பத்திகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன். அதாவது, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் தாம் வருந்தி மன்னிப்பு கோருவதாக பாலசிங்கம் தெரிவித்திருந்தார். இதில் இந்திய படைகளுடன் சண்டையிட்டது, ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பிலும் பாலசிங்கம் குறிப் பிட்டிருந்தார். இந்தியாவை தவிர்த்து, தாண்டி பயணித்து, எத னையும் செய்ய முடியாதென்பதை தனது இறுதிக் காலத்தில் பிரபாக ரன் உணர்ந்திருந்தார். பால சிங்கத்திற்கு அந்த உணர்வு ஏற்கனவே இருந்தது. அதன் காரணமாகத்தான் முன்னரே மன்னிப்பும் கோரியாவது, இநதியாவுடன் மீண்டும் உறவுகளை ஏற்படுத்துவதற்கும் அவர் முயற்சித்தார். இந்த பின்புலத்தில், இந்தியாவுடன் உறவுகளை ஏற்படுத்த வேண்டுமென்றும், அதனுடன் பணியாற்ற வேண்டும், அவர்களது ஆலோச னையை செவிமடுக்க வேண்டுமென்று கூறுபவர்கள் இந் திய அடி வருடிகள், இந்திய முகவர்கள் என்றால், இந்த விடயத்தின் முன்னோடி பாலசிங்கமும் பிரபாகரனுமல் லவா! அவர்க ளையும் அடிவருடிகள், முகவர்களென்று அழைப்பதற்கு கஜேந்திரகுமாரும் அவரது தொண்டர்களும் தயாரா?

இதே போன்று கூட்டமைப்பின் செயற்பாடுகளை எடுத்து நோக்கினால், கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றம்சாட்டுவதையே ஒரு பிரதான அரசியலாக முன்னெடுத்தது. சூழ்நிலைமைகளை புரிந்துகொண்டு, அரசியலை முன்னெடுப்பது தொடர்பில் சிந்திக்காமல், அரசாங்கத்தின் மீது குற்றம்சாட்டுவதன் மூலம் தனது தவறுகளை மூடிமறைக்க முற்பட்டது. அரசாங்கம் - அதாவது, சிங்கள ஆட்சியாளர்கள் எதனையும் தாமாக செய்ய மாட்டார்கள், என்பதுதானே இத்தீவின் சிங்கள அரசியல் வரலாறு. அவ்வாறான சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து, அதிகாரத்தை பெறுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், அதற்கான ராஜதந்திர செயற்பாடுகளை முன்னெடுப்பதும்தானே தமிழ் அரசியல் இலக்கு. அரசாங்கத்தை குற்றம்சாட்டுவதற்கு எதற்கு ஒரு தனியான கட்சி?

14 வருடகால தமிழர் லொபி, எதிர்பார்த்த வெற்றியை தரவில்லை. தோல்விலேயே முடிந்திருக்கின்றது. இதற்கான காரணங்களை ஆராய வேண்டும். இதற்கு நான் முன்னர் குறிப்பிட்ட ஒரு விடயத்தைப்பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டும். அதாவது, கடந்த காலம் தொடர்பான பரிவுணர்விற்கும் அரசியலில் கடக்க வேண்டிய உண்மைகளுக்கும் இடையில் சிக்குப்படுவதிலிருந்து விடுபட வேண்டும். தமிழர் அரசியல் லொபியை விடுதலைப் புலி விசுவாசத்திலிருந்து வெளியில் எடுக்க வேண்டும். சாகசக் கதைகள் தமிழர்களுக்குரியதே தவிர, அது சர்வ தேசத்துக்குரியதல்ல.

விடுதலைப் புலிகள் தொடர்பான மேற்குலகின் பார்வையில் எவ்வித மாற்றமும் இல்லை. மாற்றமும் ஏற்படாது. யுத்தம் முடிவுற்று, 14 வருடங்களின் பின்னரும், கூட விடுதலைப் புலிகள் மீதான பயங்கரவாத முத்திரை அப்படியே தொடர்கின்றது. மேற்குலகம் விடுதலைப் புலிகள்அமைப்பை எல்லைதாண்டிய பயங்கரவாத கண்ணோட்டத்திலேயே நோக்கிவருகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில், தமிழர்களுக்கான நீதி கோரும் லொபியை முன்னெடுக்கும் புலம்பெயர் அமைப்புக்கள் தங்களை புலி விசுவாச வட்டத்திற்குள் அடையாளப்படுத்துவதானது, அவர்களது நகர்வுகளில் ஒரு போதும் முன்னேற்றத்தை ஏற்படுத்தாது. கடந்த 14 வருடகால, நீதிக்கான தமிழ் லொபியின் தோல்வியை இந்தக் கண்ணோட்டத்தில் நோக்குவதற்கு நாம் தயாராக வேண்டும். மேற்குலகத்தினால் பயங்கரவாத அமைப்பாக நோக்கப்படும் ஒரு அமைப்பின் விசுவாசிகளாக, மேற்குலகத்தை அணுகுவது, நம்மீதான பரிவுணர்வை ஏற்படுத்தாது. உண்மையில் இந்த விடயம் தொடர்ந்தும் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கே சாதகமாக இருக்கின்றது. இப்போதும் தாங்கள் பயங்கரவாத்தினால் பாதிக்கப்பட்ட நாடென்னும் ஒரு பிரச்சாரத்தோடுதான், சிங்கள ஆளும் வர்க்கம் உலகத்தை எதிர்கொள்ளுகின்றது. இதனை புரிந்துகொள்ளாமல் நாம் முன்னெடுக்கும் விடயங்கள் எங்களுக்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். வேண்டுமானால் விசுவாசத்தை மனதில் வைத்துக் கொள்வோம், ஆனால் நமது நாவில் தந்திரம் மட்டுமே இருக்க வேண்டும். தந்திர அரசியலுக்கு விசுவாசம் இல்லை.

# மட்டக்களப்பில் தோணி கவிழ்ந்து கல்முனைவாசி நீரில் மூழ்கி பலி!

மட்டக்களப்பு, மே 18

மட்டக்களப்பு தனியார் விடுதிக்கு அருகிலுள்ள வாவியில் தோணியில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது கல்முனை பாண்டிருப்பு எல்லை வீதியைச் சேர்ந்த 35 வயதுடைய உதயராஜன் தனேஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவதினமான செவ்வாய்க்கிழமை மாலை மனைவியாரின் உறவினர்களான இருவருடன் சேர்ந்து 3 பேரும் கல்லடி வாவி யில் தனியார் விடுதிக்கு முன் னால் தோணியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தோணி கவிழ்ந்ததில் குறித்த நபர் நீரில் மூழ்கியதையடுத்து அவரை அங்கிருந்து காப்பாற்றி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதும் அவர் உயிரிழந்தார். (அ)

# கடன் மறுசீரமைப்பு தொடர்பான தகவல்கள் பரிமாறப்படுகின்றன!

## சீன வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 18

சீனாவும் இலங்கையும் தற்போது நாட்டின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான தகவல் பரிமாற்றத்தை தொடர்வதாக சீன வெளிவிவகார அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது.

இலங்கை தரப்புடன் இணைந்து பணியாற்றுவதில் சீனா தொடர்ந்தும் ஒத்துழைப்புடன் செயல்படுகிறது என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் வழமையான செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் பங்கேற்குமாறு வர்த்தக மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்களை தாம் மீண்டும் அழைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## 34 வருடங்களின் முன் நடந்த கொலைச் சம்பவம் அம்பலம்

# தற்போது சக்கர நாற்காலியில்உள்ள மனைவியும் கள்ளக்காதலனும் கைது

கொழும்பு, மே 18

34 வருடங்களின் முன்னர் கள்ளக்காதலனுடன் இணைந்து, தனது கணவரைக் கொலை செய்து மலசலகூடத்துக்குள் புதைத்த பெண்ணும், அவரது கள்ளக்காதலனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான பெண்ணுக்கு தற்போது 84 வயது. ஆணுக்கு 69 வயது.

மாத்தறை, ஊருபொக்க பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மொரவக்க நீதவானின் முன்னிலையில் நேற்று அகழ்வு பணிகள் நடந்தது. இதன்போது சில எலும்புத் துண்டுகள், பற்கள், உயிரிழந்தவர் அணிந்திருந்ததென நம்பப்படும் ரீசேர்ட், சடலத்தை மூட பயன்படுத்தப்பட்ட துணி என்பன மீட்கப்பட்டன.

தோலமுல்ல அன்னாசி தோட்டம் பகுதியில் வசித்து வந்த கபுகே ஜினதாச என்ற நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டபோது ஜினதாசவுக்கு 51 வயது.

1989ஆண்டு ஜேவிபியின் புரட்சி நடந்த சமயத் தில் இந்த கொலை நிகழ்ந்தது.

அப்போது 49 வயதான இருந்த பெண்ணுக்கும், 35 வயதான ஆணுக்கும் கள்ளக்காதல் ஏற்பட்டிருந்தது. இந்த விவகாரம் கணவர் ஜினதாசவுக்கு தெரிய வந்து, இருவரையும் பலமுறை கண்டித்துள்ளார். எனினும், மனைவியின் கள்ளக்காதலை நிறுத்த முடியவில்லை.

இதனால் சச்சரவு அதிகரித்தது. தமது பிள்ளைகளின் பெயரால் இந்த தவறான உறவை நிறுத்துமாறு ஒருநாள் கணவர், மனைவியை வற்புறுத்தினார். அன்றிரவு கொலை நடந்தது.

உறக்கத்திலிருந்த கணவரை, மனைவியும், கள்ளக்காதலனும் இணைந்து கட்டையால் அடித்துக் கொன்றனர். பின்னர் சடலத்தை துனியால் மூடிக் கட்டி, மலசலகூட குழிக்குள் போட்டு மூடி விட்டனர்.

பின்னர் சிறிது காலத்தில் மலசலக்குழியையும் மூடிவிட்டனர்.

ஜேவிபி நெருக்கடியின்போது கணவர் காணாமல் போய்விட்டார் என மனைவி கூறினார். யாரும் சந்தேகப்படவில்லை.

34 வருடங்களின் பின்னர் தற்போது பொலிசாருக்கு இரகசிய தகவல் கிடைத்து, நேற்று முன்தினம் அகழ்வு பணி நடந்தது.

தடயப்பொருட்கள் மீட்கப்பட்டதை தொடர்ந்து, தற்போது 69 வயதான காதலனும், தற்போது 83 வயதான காதலியும் கைது செய்யப்பட்டனர். கைதான பெண் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, சக்கர நாற்காலியில் உள்ளார்.

34 வருடங்களின் முன்னர் அந்தப் பெண் கவர்ச்சிகரமான பெண்ணாக இருந்தாகவும், அதனால் தான் காதல் வசப்பட்டிருந்ததாகவும் கைதான முதியவர் தெரிவித்துள்ளார். (அ)

# திரியாயில் கதிர்காம யாத்திரீகர்களுக்கு இராணுவத்தினர் உணவு, மருத்துவ உதவி



காரைதீவு, மே 18

இந்துக்களின் பாரம்பரிய யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிப் புறப்பட்ட ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரைக் குழுவினர் நேற்று புதன்கிழமை காலை திருகோணமலை திரியாயை சென்றடைந்தனர்.

புல்மோட்டையிலிருந்து திரியாய் வந்தடைந்த யாத்திரீகர்களை அங்குள்ள இராணுவத்தினர் மற்றும் பௌத்த விகாரை பிக்கு ஆகியோர் வரவேற்றனர்.

அவர்களுக்கு காலை ஆகாரம் வழங்கி மருத்துவ முகாம் வசதியையும் ஏற்பாடு செய்து வழங்கினர்.

இன்று வியாழக்கிழமை கும்புறுப்பிட்டியில் யாத்திரீகர்கள் தங்குவார்கள்.

குழுவில் இதுவரை 68 யாத்திரீகர்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)







# கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட அப்பாவித் தமிழருக்கு நீதி வேண்டும்!

## சர்வதேசம் தலையிடவேண்டும் என்கிறார் ஜெயசிறில்

காரைதீவு, மே 18

**“கொத்து கொத்தாக கொல்லப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும். சர்வதேசம் இன்னும் தாமதிக்காமல் தலையிட்டு நீதி வழங்க வேண்டும்.”**

**-இவ்வாறு கல்முனை பாண்டிருப்பில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.**



அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒன்றியம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடாத்தும் மே 18 தமிழர் இன அழிப்பு நாள் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரத்தின் ஓரங்கமாக நேற்றும் நேற்று முன்தினமும் பேரவல நினைவுப் பதாதைகள் பாண்டிருப்பு தாதன் மண்டப முன்றலில் காட்சிப் படுத்தப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் சமூக செயற்பாட்டாளர் கே.கணேஷ் தர்சினி, பிரமுகர்களான தா.பிரதீபன், பிரபா மற்றும் மகளிரணித் தலைவி நித்யகைலேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

அங்கு ஜெயசிறில் மேலும் தெரிவிக்கையில்- தமிழர்களின் மனதில் நீங்காத நினைவு நாள் முள்ளிவாய்க்கால் மே 18. தமிழினம் அழிக்கப்பட்ட நாள். கொத்துக்கொத்தாக கொல்லப்பட்ட எம் மாணவர்களையும் அப்பாவி தமிழர்களையும் கொன்று குவித்த மே 18 நாளை உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் ஒருபோதும் மறந்துவிட முடியாது. இந்த நினைவு நாளை மழுங்கடிக்கச் செய்து மறந்து போக வேண்டும் என்பதற்காக இங்கு யுத்த வெற்றிகள் அரசினால் கொண்டாடப்படுகின்றன. அது எமது உறவுகளை இழந்த மக்கள் உணர்வு பூர்வமாக இறுதி மரணத்தின் போது இறுதியாக அருந்திய முள்ளிவாய்க்கால் கஞ்சி நிகழ் வேந்தலானது பல பிரதேசங்களில் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். மாணவர்கள் அப்பாவி தமிழ் மக்கள் மீது கேட்பார் பார்ப்பார் யாரும் இல்லாமல் கடந்த 2009 ஆம் ஆண்டு கொன்று குவித்தது போல் எதிர்வரும் காலங்களில் நடந்து விடக்கூடாது என்பதற்காக இதனை நடத்துகிறோம்.

எதிர்வரும் காலங்களிலும் எமது எதிர்கால சிறார்கள் இதை புரிய வைக்க வேண்டிய ஒரு தார்மீக பொறுப்பு எமக்கு இருக்கின்றது. எமது மக்களுடைய பயங்கரமான மிலேச்சத்தரமான படுகொலையை செய்த இந்த ஆட்சியாளர்கள் முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாக துண்டு துண்டாக சிதைக்கப்பட்டு உயிர் பிரியும் போது அவர்களுடைய திட்டுக்கள் இன்று பலித்திருக்கின்றது. எம் தலைவர்கள் சொன்னது போன்று அவர்களை தெரிவு செய்த மக்களே அவர்களை இந்த நாட்டை விட்டு இந்த ஆட்சியை விட்டு விரட்டிய காலம் நடைபெற்றது .இந்த ஆத்மாக்கள் எவ்விதமான குற்றமும் செய்யாமல் தமிழர்களாய் பிறந்த காரணத்தினால் தத்தளிக்க தத்தளிக்க உயிர் பிரியும் போது அவர்களுடைய சிந்தனை அவர்களுடைய ஆத்மாக்களினுடைய விருப்பங்கள் இன்று அரங்கேறி இருக்கின்றது. தமிழினத்தின் படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் . எமது மக்களுக்கான நீதி கிடைக்கப்பெற வேண்டும். எதிர்காலத்தில் எமது தமிழர்கள் மீது இவ்வாறான செயல்பாடுகள் இடம் பெறக்கூடாது என்பதற்காக உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் அனைவரும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளை உணர்வு பூர்வமாக அனுஷ்டித்து வருகின்றார்கள் .இந்த உறவுகளை இழந்த எங்களுடைய வலிகளை அடக்கி ஆண்டு இந்த தினத்தை நினைவு கூற உறவுகளை நினைவு கூற முடியாது என்று சொல்வதற்கு இங்கு யாருக்கு உரிமை கிடையாது. உயர்நீத்த உறவுகளை ஒவ்வொரு தமிழனும் உணர்வு பூர்வமாக நினைவு கூற முடியும். எமது தமிழர்கள் தத்தளித்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அழிவின் பாதையிலும் அடக்கு முறைகளிலுமே ஒடுக்கப்பட்டார்கள் கடந்த காலம். பயங்கரவாத சட்டத்தின் ஊடாக பல அப்பாவி தமிழர்களை சிறைவாசம் வைத்தார்கள். தமிழர்களுடைய நிலவளங்கள் நீர் வளங்கள் நாளுக்கு நாள் சுரண்டப்பட்டு கொண்டு வருகின்றது. எங்களுடைய வணக்க ஸ்தலங்களுக்கு பதிலாக புத்தர்கள் எழுந்த வண்ணம் வருகின்றன. எமது இனத்தின் நிலத்தையும் எமது இனத்தையும் கபளீகரம் செய்தவர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக நாங்கள் போராடி எமது இனத்தின் விடுதலைக்காகவும் எனது இனத்தின் இழப்புக்களுக்கான நீதிகளை பெறும் வரையும் எங்களுடைய நினைவு கூரல்களும் போராட்டங்களும் தொடரும் இன்றைய நாளிலே படுகொலை செய்யப்பட்ட அப்பாவி குழந்தைகள் பெரியவர்கள் உறவுகள் உடைய புகைப்படத்தை இந்த இடத்திலே மாணவர்களோடு நாங்கள் காட்சிப்படுத்தி இந்த இடத்திலே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சியும் வழங்குகின்ற நினைவு தினத்தை நடத்துகிறோம். தமிழர்களுடைய தாகம் தணியும் வரை எங்களுடைய செயல்பாடு தொடரும்- என்றார்.

(அ)

# அம்பாறை மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு



காரைதீவு, மே 18

அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒன்றியம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடத்தும் மே 18 தமிழர் இன அழிப்பு நாள் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரத்தின் ஓரங்கமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பேரவல நினைவுப் பதாதைகள் பாண்டிருப்பு தாதன் மண்டப முன்றலில் காட்சிப்படுத்தப்பட்டன.

முன்னதாக கல்முனை பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோவிலில் சிறப்பு பூசை வழிபாடு இடம் பெற்றது.ஆலய பிரதமபூசகர் அழகக்கோன் சிவரெத்தினம் விசேட பூசையை நடத்தினார்.

பின்னர் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் பதாகைகள் காட்சிப்படுத்தும் நிகழ்வு இடம் பெற்றது. பிரமுகர்களும் பாடசாலை மாணவர்களும் பார்வையிட்டனர்.

நிகழ்வில் முன்னாள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் தர்சினி, பிரமுகர்களான தா.பிரதீபன் பிரபா மற்றும் மகளிரணித் தலைவி நித்யகைலேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

முள்ளிவாய்க்கால் அனர்த்தம் தொடர்பான பதாகைகள் கட்அவுட்டுகள் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன. (அ)

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் கல்முனைப் பகுதியில் தீவிரம்

அக்கரைப்பற்று, மே 18

டெங்கு கட்டுப்பாட்டு தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலின் பேரில் கிழக்கு மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு தினம் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைவாகவே கல்முனையிலும் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் ஆலோசனை, வழிகாட்டலில் காலை 6.00 மணி தொடக்கம் மாநகர சபைக்குட்பட்ட 04 சுகாதார வலயங்களிலும் உள்ள பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்ட பல இடங்களில் டெங்கு ஒழிப்புச் சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



அத்துடன் மாநகர சபையின் பிரதான அலுவலக வளாகம், பழைய கட்டிடத் தொகுதி வளாகம், பொது நூலகங்கள் மற்றும் மாநகர சபையின் கீழ் உள்ள பொது இடங்களும் மாநகர சபை உத்தியோகத்தர்களினால் சிரமதானம் செய்யப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டன.

மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என்.பரமேஸ்பர வர்மன், சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ மேற்பார்வையாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (அ)

# மாலையர்கட்டு பாடசாலையில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம்



மட்டக்களப்பு, மே 18

கல்வி அமைச்சினதும் ஜனாதிபதி செயலகத்தினதும் அறிவுறுத்தலின் பேரில் மட்டக்களப்பு மாலையர்கட்டு அ.த.க.பாடசாலையில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம் நடைபெற்றது. அதிபர் எஸ்.தேவகுமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# தாய்லாந்து பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் அபார வெற்றி!

## இராணுவ ஆட்சி முடிவுக்கு வருகிறது

பாங்கொக், மே 18

**தாய்லாந்தில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகளான மூவ் போர்வேர்ட் கட்சி, பியூ தாய் கட்சி ஆகியன அபார வெற்றி பெற்றுள்ளன.**



தாய்லாந்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைத்து கடந்த 2014 ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது.

அதனைத் தொடர்ந்து, அந்நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதி பிரயுத் சன் ஓ சா பிரதமராக இருந்து வந்தார்.

இதற்கிடையே, இராணுவ ஆட்சி மற்றும் மன்னர் முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து இளைஞர்கள் தொடர் போராட்டம் நடத்தி வந்தனர்.

இதைத் தொடர்ந்து தாய்லாந்தில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டு, கடந்த 14 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது.

இதில் இராணுவ ஆதரவு பெற்ற கட்சிகளும் எதிர்க்கட்சிகளான பார்வர்ட் கட்சி, பியூ தாய் கட்சி உள்ளிட்டவை பலப்பரீட்சை நடத்தின.

வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டதில், எதிர்க்கட்சிகள் அபார வெற்றி பெற்றுள்ளன. இராணுவ ஆதரவு பெற்ற கட்சிகள் படுதோல்வியைச் சந்தித்துள்ளன.

நேற்று முன் தினம் அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட நிலையில், 500 இடங்களைக் கொண்ட பிரதிநிதி சபையில் மூவ் போர்வேட் கட்சி 151 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. பியு தாய் கட்சி 141 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

இராணுவத்தின் ஆதரவு பெற்ற ஆளும் கூட்டணியில் உள்ள இரண்டு கட்சிகள் வெறும் 15 வீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளன.

பிரதமர் பிரயுத் சன் ஓ சாவின் கட்சி 36 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

தேர்தல் முடிவுகளை அடுத்து தாய்லாந்தில் 9 ஆண்டுகளுக்கு பிறகு இராணுவ ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஜனநாயக முறையிலான ஆட்சி அமையவுள்ளது.

மூவ் போர்வேட் கட்சி மேலும் சில கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கும் என்றும் பிற்றா பிரதமராக பதவி ஏற்பார் என்றும் கூறப்படுகிறது.

அடுத்த பிரதமர் யார் என்பதற்காக வாக்கெடுப்பு எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ளது. இதில் செனட் சபையில் உள்ள 750 இடங்களில் 376 இடங்களைக் கைப்பற்றவேண்டும்.

(அ)

# சீன மீன்பிடிக் கப்பல் 39 பேருடன் இந்திய பெருங்கடலில் கவிழ்ந்தது!

பீஜிங், மே 18

39 பேருடன் பயணித்த சீன மீன்பிடிக் கப்பலொன்று, இந்தியப் பெருங்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய இந்தியப் பெருங்கடலில் இந்த சீன மீன்பிடிக் கப்பல் கவிழ்ந்ததாகவும் அதில் இருந்த 17 சீனர்கள், 17 இந்தோனேசியர்கள் மற்றும் 5 பிலிப்பைன்ஸ் நாட்டவர்களை கொண்ட அதன் பணியாளர்களைக் காணவில்லை என்றும் சீன ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி தென்னாபிரிக்காவின் கேப் டவுனிலிருந்து புறப்பட்ட நீளமான இந்த மீன்பிடிக் கப்பல், மாலைதீவுக்கு தெற்கு திசையில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக கப்பல் கண்காணிப்பு இணையத்தளமொன்று தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் சீன நேரப்படி, செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிக்கு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவுஸ்திரேலியா, இலங்கை, மாலைதீவு, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் பிற நாடுகளில் உள்ள தமது தூதரகங்கள் மூலம் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வருவதாக சீனாவின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# நியூஸிலாந்து தீ விபத்து ஆறு பேர் உயிரிழப்பு!

வெலிங்டன், மே 18

நியூஸிலாந்தில் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

நியூஸிலாந்தின் வெலிங்டனில் உள்ள 4 மாடிகள் கொண்ட தங்கும் விடுதியொன்றில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கட்டடத்தில் சிக்கியிருந்த சிலர் மீட்கப்பட்டுள்ளனர் என்றும், மேலும் பலர் அங்கு சிக்கியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்பதுடன், தீயை அணைக்க சுமார் 20 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(அ)

# மெல்பேர்ணில் நடந்த பஸ் விபத்தில் ஆரம்ப பாடசாலை மாணவர் காயம்



மெல்பேர்ன், மே. 18

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் 9 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

45 சிறார்களுடன் பயணித்த பஸ்ஸை பின்னால் வந்த ட்ரக் வண்டியொன்று மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த 5 தொடக்கம் 11 வயதுக்கிடைப்பட்ட 9 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பலருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ள நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

9 மாணவர்களில் 7 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதெனவும் ஒருவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

49 வயதான பஸ்ஸின் சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

(அ)

# இம்ரான்கானின் ஆதரவாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ள அரசு

இஸ்லாமாபாத், மே 18

இம்ரான் கான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த போராட்டக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தலைமையில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்புக் குழுக் கூட்டத்தினை தொடர்ந்து குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான முதற்கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

கடந்த 09ஆம் திகதி இம்ரான் கான் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து அவரின் ஆதரவாளர்களினால் பாகிஸ்தான் முழுவதும் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்கு பாரிய சேதங்கள் விளைவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பிரிஜித் மக்ரோனின் உறவினர் மீது அரசின் எதிர்ப்பாளர்கள் தாக்குதல்!

## அதிபரின் தொலைக்காட்சி உரையை அடுத்துச் சம்பவம்

பாரிஸ், மே 19

பிரான்ஸின் முதற் பெண் பிரிஜித் மக்ரோனின் மூத்த மருமகன் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டிருக்கிறார். நாட்டின் வடக்கே அமியன் என்ற நகரத்தில் குடும்ப சொக்கிலேட் தயாரிப்பு, விற்பனை நிலையத்தில் வைத்து ஜோன் பப்ரிஸ் த்ரோனியோ என்பவரே திங்கட்கிழமை முன்னிரவு தாக்கி அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எட்டுப் பேரைப் பொலீஸார் கைதுசெய்து தடுத்துவைத்திருக்கின்றனர்.

பிரிஜித் மக்ரோனின் குடும்பத்தினர் ஆறு தலைமுறைகளாகப் பிரபல சொக்கிலேட் மற்றும் மக்கரன் பிஸ்கட் தயாரிப்புத் தொழிற்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். அமியன் நகரிலும் நாட்டின் வட பகுதி நகரங்களிலும் த்ரோனியோ சொக்கிலேட் மற்றும் இனிப்புப் பண்டங்கள் மிகப் பிரபலம் பெற்றவை.

அதிபர் மக்ரோன் கடந்த திங்கள் இரவு எலிஸே மாளிகையில் இருந்தவாறு தொலைக்காட்சி ஒன்றுக்கு விசேட செவ்வியை வழங்கியிருந்தார். அவரது செவ்வியில் ஓய்வூதியச் சட்டம் உட்படப் பல் வேறு விடயங்களைப் பற்றி அவர்

பதில்களை வெளியிட்டிருந்தார். அந்த செவ்வி ஒளிபரப்பாகி நிறைவடைந்த பின்னரே




மக்ரோன் தம்பதிகளது மூத்த மருமகன் ஓய்வூதிய எதிர்ப்பாளர்கள் அடங்கிய குழு ஒன்றினால் அவரது வர்த்தக நிலையத்தில் வைத்துத் தாக்கி அச்சுறுத்தப்பட்டார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதிபரது தொலைக்காட்சி உரை இடம்பெற்றவேளை அந்தப் பகுதியில் சட்டி பானைகளைத் தட்டி ஒலி எழுப்பி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களில் சிலரே திடீரென வந்து வர்த்தக நிலையத்தை நோக்கிக் கற்களை வீசியதுடன் தனது மகனைத் தலையிலும் கைகால்களிலும் தாக்கினர் என்றும் மக்ரோன் குடும்பத்தினரை இழிவுபடுத்திக் குரல் எழுப்பினர் எனவும் தாக்கப்பட்டவரின் தந்தையார் தெரிவித்திருக்கிறார்.

தாக்குதலுக்கு இலக்கான ஜோன் பப்ரிஸ் த்ரோனியோ (வயது 30) மருத்துவக் கண்காணிப்பின் கீழ் உள்ளார்.

முதற் பெண்மணி பிரிஜித் மக்ரோன் தனது மருமகன் தாக்கப்பட்டிருப்பதைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். அரசியல் தலைவர்கள் பலரும் கூட இது குறித்துத் தங்கள் கண்டனங்களைப் பதிவு செய்துள்ளனர். தீவிர வலதுசாரித் தலைவி மரின் லூ பென், “இவை போன்ற செயல்கள் சட்டத்தின் ஊடாக மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியது அவசியம்” எனக் கூறியிருக்கிறார்.

(அ)



## இத்தாலியன் ரென்னிஸ் காலிறுதி சுற்றில் இகா!

ரோம், மே 18

குரோஷியா வீராங்கனை டோனா வெகிச்சை வீழ்த்தி போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக் காலிறுதிக்குள் நுழைந்தார்.

இத்தாலியன் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி ரோமில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று போட்டி ஒன்றில் முதல் நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான இகா ஸ்வியாரெக் (போலந்து) 6-3, 6-4 என்ற நேர் செற்றில் டோனா வெகிச்சை (குரோஷியா) வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார். (ஐ)



## ஆஷஷ் தொடரில் ஆர்ச்சர் சந்தேகம்!

லண்டன், மே 18

இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஜூன் முதலாம் திகதி அயர்லாந்துக்கு எதிராக ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடவுள்ளது. இந்த போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்தத் தொடரை அடுத்து இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் நடைபெறுகிறது. ஆஷஷ் தொடரில் ஆட அயர்லாந்துக்கு எதிரான தொடர் ஒரு முன்னோட்டமாக பார்க்கப்பட்டது. ஆஷஷ் தொடரில் யாரெல்லாம் இடம் பெறுவார்கள் என கணிக்கவும் இந்த தொடர் முக்கியமாக பார்க்கபடுகிறது.

இந்நிலையில், அயர்லாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு பென் ஸ்டோக்ஸ் தலைமை தாங்குகிறார். காயம் காரணமாக ஐ. பி. எல். தொடரில் இருந்து விலகிய பெயர்ஸ்ரோ அணியில் இடம் பிடித்துள்ளார்.

இதேவேளை, வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் அணியில் இடம் பெறவில்லை. இதனால், அவர் ஆஷஷ் தொடரிலும் இங்கிலாந்து அணியில் இணைவது சந்தேகமே.

அயர்லாந்து டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி விவரம்:

பென் ஸ்ரோக்ஸ் (அணித்தலைவர்), ஜேம்ஸ் அண்டர்சன், ஜொனதன் பெயர்ஸ்ரோ, ஸ்ரூவர்ட் பிரோட், ஹரி புரூக், ஜாக் க்ராவ்லி, பென் டக்கட், டான் லோரன்ஸ், ஜேக் லீச், ஒல்லி போப், மத்தியூ பாட்ஸ், ஒல்லி றொபின்சன், ஜோ ரூட், கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்.

# மும்பைக்கு எதிராக லக்னோ த்ரில் வெற்றி!



லக்னோ, மே 18

லக்னோவுக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை அணி 172 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது. ஐந்து ஓட்டங்கள் வித்தியாசத்தில் கடைசி ஓவரில் த்ரில் வெற்றிபெற்றது லக்னோ அணி.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. லக்னோவில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் ஆடிய லக்னோ அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்கள் சேர்த்தது. முதல்நிலை வீரர்கள் மூன்று பேர் விரைவில் ஆட்டமிழந்த நிலையிலும், அணித்தலைவர் குர்னல் பாண்ட்யா மற்றும் மார்கஸ் ஸ்ரொய்னிஸின் பொறுப்பான ஆட்டத்தால் இவ்வளவு ஓட்டங்களை குவித்தது.

குர்னல் பாண்ட்யா 49 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் காயத்தால் துடுப்பாட்டத்தைத் தொடர முடியாமல் வெளியேறினார். அதேநேரம், மார்கஸ் ஸ்ரொய்னிஸ் மும்பை பந்துவீச்சாளர்களை வெளுத்து வாங்கினார். அவர் 4 பௌண்ட்ரி, 8 சிக்ஸர்களுடன் 89 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

மும்பை இந்தியன்ஸ் தரப்பில் ஜசன் பெஹ்ரன்டாப் 2 விக்கெட் வீழ்த்தினார். இதன்பின், 178 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு அதன் தலைவர் ரோஹித் சர்மா மற்றும் இஷான் கிஷன் இணை சிறப்பான தொடக்கம் கொடுத்தது. இருவரும் 90 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றது. 10ஆவது ஓவரிலேயே இந்தக் கூட்டணியை பிரிக்க முடிந்தது. ரவி பிஷ்னோய் முதல் விக்கெட்டாக 37 ஓட்டங்கள் ரோஹித் சர்மாவை வெளியேற்றினார்.

இதே ரவி பிஷ்னோய் தனது அடுத்த ஓவரில் இஷான் கிஷனையும் ஆட்டமிழக்க செய்தார். இஷான் கிஷன் 59 ஓட்டங்கள் எடுத்திருந்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சூர்யகுமார் யாதவ் 7 ஓட்டங்களிலும், நேஹல் வதேரா 16 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க மும்பை நெருக்கடியைச் சந்தித்தது.

கடைசி இரண்டு ஓவர்களில் வெற்றிக்கு 30 ஓட்டங்கள் தேவைப்பட்டது. சமீப காலங்களில் மும்பை இந்தியன்ஸ் அணியின் இறுதி வீரராக களமிறக்கப்பட்டு வரும் ரிம் டேவிட் இந்தப் போட்டியிலும் அசத்தினார். நவீன் உல் ஹக் வீசிய 19ஆவது இரண்டு சிக்ஸர்கள் அவர் விளாச, அந்த ஓவரில் மட்டும் 19 ஓட்டங்கள் கிடைத்தது. இறுதி ஓவரில் 11 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவைப்பட்டது. கடைசி ஓவரை வீசிய மொஹ்சின் கான் சிறப்பாக பந்து வீசி ரிம் டேவிட் மற்றும் கிறீன் இருவரையும் பெரிய ஷொட்கள் ஆட விடாமல் தடுத்தார். அந்த ஓவரில் ஐந்து ஓட்டங்கள் மட்டுமே விட்டுகொடுத்தார்.

இதனால் மும்பை அணி 172 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது. ஐந்து ஓட்டங்கள் வித்தியாசத்தில் கடைசி ஓவரில் த்ரில் வெற்றிபெற்றது லக்னோ அணி. (ஐ)

## முதல்நிலை வீரரான அல்கராஸை வீழ்த்தினார் 135ஆவது நிலை வீரர்!

ரோம், மே 18

உலகின் முதல்நிலை வீரரான ஸ்பெய்னின் கார்லோஸ் அல்கராஸ் இத்தாலிய பகிரங்க சுற்றுப்போட்டியில் அதிகம் அறியப்படாத வீரர் பாபியன் மரோஸானிடம் தோல்வியுற்றார்.

20 வயதான கார்லோஸ் அல்காரெஸ், கடந்த வருடம் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் சுற்றுப்போட்டியில் சம்பியனானவர்.

தற்போது, உலகத் தரவரிசையில் இரண்டாமிடத்திலுள்ள அவர், இத்தாலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் பின்னர் வெளியிடப்படவுள்ள புதிய தரவரிசை பட்டியலில் முதலிடத்தைப் பெறவுள்ளார்.

இந்நிலையில், மூன்றாவது சுற்றில் அல்கராஸை ஹங்கேரியின் பாபியன் மொராஸன் 6-3, 7-6, (7/4) என்ற செற் கணக்கில் வென்றார்.

23 வயதான மொராஸன் உலக ரென்னிஸ் தரவரிசையில் 135 ஆவது இடத்திலுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மக்கள் எதிர்பார்க்கும் மின் கட்டணம் முன்வைத்த பிரேரணையில் இல்லை!



## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 18

**பொதுமக்கள் எதிர்பார்க்கும் வகையில் மின் கட்டணத்தை குறைப்பதற்கான பிரேரணையை இலங்கை மின்சார சபை முன்வைக்கவில்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

மின்சார கட்டணத்தை குறைப்பது தொடர்பில் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை ஆராய்ந்தபோதே இந்த விடயம் அறியக் கிடைத்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

ஜூலை முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் மின்சார கட்டணத்தைக் குறைப்பதற்கான பிரேரணை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

குறித்த பிரேரணை தொடர்பில் உரிய மீளாய்வு செய்யப்பட வேண்டும் என ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இதற்கு தேவையான மேலதிக தரவுகளை சமர்ப்பிக்குமாறு மின்சார சபையிடம் கோரியுள்ளதாகவும் மின்சார சபையின் பிரேரணைக்கான அனுமதியை எதிர்வரும் 3 நாட்களுக்குள் பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டினார். (அ)

# கறுவாச் செய்கை தொடர்பில் யாழ்ப்பாணத்தில் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 18

வடபகுதியில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் முகமாக அது குறித்த விளக்கச் செயலமர்வு ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை பங்குரு முருகன் கோவில் சன சமூக மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையில் நடைபெறும் இந்த செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வடக்கில் கறுவாச் செய்கையை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்க உரை நிகழ்த்துவார்.

அதனைவிட கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பலரும் இந்த செயலமர்வில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவிப்புடன், பொதுமக்களின் கேள்விகள், சந்தேகங்களுக்கு பதிலளிப்பார்கள்.

வடபகுதியில் கறுவாச் செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதற்கான செய்முறை விளக்கங்களும் இங்கு வழங்கப்படுவதுடன், ஆர்வமுள்ளவர்களுக்கு கறுவா கன்றுகளும் இலவசமாக வழங்கப்படும். அதனை எவ்வாறு செய்கை பண்ணலாம் என்பதற்கான விளக்கங்களும் உதவிகளும் அவர்களுக்கு வழங்கப்படும்.

கறுவாகச் செய்கையை வீட்டுத் தோட்டமாக சிறியளவிலோ பெரியளவிலோ செய்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் யாரும் இந்த செயலமர்வில் பங்குகொண்டு பயனடைய முடியும் என இதனை ஏற்பாடு செய்திருக்கும் புவனகுமார் தெரிவித்தார். வடபகுதி மக்களுக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பு என்பதால், இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இந்த செயலமர்வு இலவசமாகவே நடத்தப்படுகின்றது.

கறுவா பட்டையிலிருந்து பெறுமதி சேர் உற்பத்திகள் பலவற்றையும் மேற்கொள்ள முடியும். அவை தொடர்பாகவும் இங்கு விளக்கமும் பயிற்சியும் வழங்கப்படும்.

கறுவா பட்டையும் அதன் மூலமான பெறுமதி சேர் உற்பத்திகளும் ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த உற்பத்திகளையும் செயலமர்வின்போது பார்வையிட முடியும்.

இது தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவைப்படுபவர்கள் நிகழ்ச்சி இணைப்பாளரான ஐங்கரனுடன் 077 062 9013 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம். (அ)

# போதகர் ஜெரோமுக்கு எதிராக ஞானசார தேரர் முறைப்பாடு!

கொழும்பு, மே 18

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக விசாரணை நடத்தப்படவேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு எதிராக விசாரணை கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் எழுத்து மூல முறைப்பாடு ஒன்றையும் வழங்கியுள்ளார்.

இந்த எழுத்துமூல முறைப்பாடு நேற்று முந்தினம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த போதகர் புத்தரை அவமதித்துள்ளதாகவும் அவரது செயற்பாடுகளால் நாட்டின் மத நல்லிணக்கம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கிறிஸ்தவ அடிப்படைவாதக் கும்பல் மிக வேகமாக மதமாற்றத்தை பரப்பி வருவதாகவும் கலகொடஅத்தே ஞானசார தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த சதியில் இந்த மத போதகரும் ஒரு அங்கம்.

எனவே மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு மற்றொரு கட்டம் நாளை முதல் ஆரம்பம்

கொழும்பு, மே 18

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளின் மற்றுமொரு கட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அதன்படி நாளை வெள்ளிக்கிழமை இந்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 32 மத்திய நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதுவரை 2 பாடங்களுக்கான மதிப்பீட்டுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 6 பாடங்களுக்கான மதிப்பீட்டு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, விஞ்ஞானப் பிரிவிலுள்ள பாடங்களுக்கான மதிப்பீட்டு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த இரண்டரை மாதங்களாக தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் மதிப்பீட்டுப் பணிகளுக்காக ஆசிரியர்கள் விண்ணப்பிக்காமை காரணமாக உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தாமதமாகியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணிலுக்கு சல்யூட் அடிப்பதில் எனக்கு பிரச்னை கிடையாது!

## கூறுகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, மே. 18

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திருடன் அல்லன். அவர்தான் என்னை அரசியலுக்கு கொண்டுவந்தார். அவருக்கு ‘சல்யூட்’ அடிக்க நான் தயங்கபோவதில்லை.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவ தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அத்துடன், தேசிய படைவீரர் நினைவுதின நிகழ்வுகளில் கடந்த காலத்தில் தாம் பங்கேற்கவில்லை எனவும், இம்முறை பங்கேற்கவுள்ளதாகவும் பொன்சேகா குறிப்பிட்டார். (அ)

# ஆளுநர் பதவியை ஏற்பதற்கு தயார்!

## ஹரிசன் அறிவிப்பு

கொழும்பு, மே. 18

தனக்கு ஆளுநர் பதவி வழங்கப்படுமானால் அதனை ஏற்று பணியாற்றத் தயார் என்று முன்னாள் அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உபதலைவராகச் செயற்பட்ட பி. ஹரிசன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க போவதாக அறிவித்தார்.

இந்நிலையில் ஆளுநர் பதவி வழங்கப்பட்டால் அதனை ஏற்க தயாரா என எழுப்பட்ட கேள்விக்கு,

“அது பற்றி பரிசீலிக்கலாம். பதவி வழங்கப்படுமானால் அதனை ஏற்காமல் இருக்கபோவதும் இல்லை.”-எனப் பதிலளித்தார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 17 எம்.பிக்கள்வரை ரணிலுக்கு ஆதரவு வழங்க உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ‘மொடல் அழகி’ தேவையெனக் கூறி

# மாணவிகளின் நிர்வாண படங்கள் திரட்டிய உயர்தர மாணவன் கைது!

கொழும்பு, மே 18

‘மொடல் அழகிகள்’ தேவை எனக்கூறி 12 மாணவிகளின் நிர்வாணப் படங்களை ‘வட்ஸ்அப்’ ஊடாக திரட்டிய 19 வயது உயர்தர வகுப்பு மாணவரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணை பிரிவினராலேயே இவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

குறித்த மாணவன், கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொடை பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் உயர்தரத்தில் கற்று வந்துள்ளார்.

மினுவாங்கொடை, கம்பஹா மற்றும் நீர்க்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவிகளின் நிர்வாணப் படங்களையே இவர் பெற்றுள்ளார். குறித்த மாணவிகள் சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் கல்வி பயில்கின்றனர்.

தனியார் தொலைக்காட்சியொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவுக்கு செய்த முறைப்பாட்டின் பிரகாரமே இது தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் பிரபலமான மொடல்கள் பெயரில் இரு போலி வட்ஸ்அப் கணக்குகளை உருவாக்கி, மொடல் ஆகுவதற்கு விருப்பமுள்ள இளம் பெண்களுடன் தகவல்களைப் பரிமாற்றி வந்துள்ளார்.

18 முதல் 20 வயதுடைய யுவதிகள் இந்த குழுவுக்குத் தகவல் அனுப்பலாம் என இதில் பதிவிடப்பட்டுள்ளது.

குறித்த கணக்குக்கு மெசேஜ் அனுப்பும் இளம் பெண்களை முதலில் தங்கள் புகைப்படங்களை அனுப்புமாறு கோரியுள்ளார். அதன் பின்னர் மொடல் அழகி ஆகவேண்டுமென்றால் நிர்வாணப் படம் வேண்டும் எனக் கூறி அதனை பெற்றுள்ளார்.

சி.ஐ.டியினர் முன்னெடுத்த விசாரணைகளில், பிரபல மொடல் அழகிகளின் பெயர்களில் வட்ஸ்அப் கணக்குகளை நடத்தி வந்த மாணவனை அடையாளம் கண்டதுடன் அவரை மினுவாங்கொடை பிரதேசத்தில் வைத்து கைது செய்தனர்.

அவர் சி.ஐ.டியினரிடம் சிக்குவதற்கு முன்னர் கணினியில் இருந்த அந்த நிர்வாணப் படங்கள் அனைத்தையும் அழித்துள்ளார்.

எனினும், தொழில்நுட்பம் ஊடாக சேமிக்கப்பட்டிருந்த படங்களை அதிகாரிகள் மீளப் பெற்றனர். (அ)

## முள்ளிவாய்க்கால் அஞ்சலி...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கருத்துரைத்த அவர்,

பதினான்கு ஆண்டுகளாகி போன 2009ஆம் ஆண்டின் இன அழிப்பின் நினைவு தினம் (இன்று) வியாழக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்திலே நினைவு கூரப்பட இருக்கின்றது.

கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக நிகழ்ந்தது போல இந்த ஆண்டும் சரியாக காலை 10.05 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. முள்ளிவாய்க்கால் என்பது ஓர் இடம் மட்டுமல்ல. எங்களுடைய வாழ்வியலாக மாறியிருக்கின்றது. எங்களுடைய தமிழினத்தின் விடுதலைக்கான ஒரு புள்ளியாகவும் இந்த இடம் இருக்கிறது.

இந்த மண்ணிலே படுகொலை செய்யப்பட்ட அத்தனை மக்களையும் நாங்கள் நினைவுகூரக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

ஆகவே இந்த நினைவேந்தலில் பங்கெடுக்க தமிழின உணர்வாளர்கள் அனைவரையும் பொதுக்கட்டமைப்பின் சார்பாக அழைத்து நிற்கின்றோம். இந்த நிகழ்விலே பங்கெடுக்க முடியாதவர்கள் உங்களுடைய இல்லங்களில் மாலையிலே விளக்கேற்றி இறந்தவர்களின் ஆன்மா இளைப்பாற மன்றாடும்படி கேட்டு நிற்கின்றோம்.

இறுதி யுத்த காலங்களிலே மக்களுக்கான வாழ்வுக்கு அல்லது உயிரைப் பிடித்துக் கொள்ள காரணமாக இருந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை உங்களுடைய இல்லங்களிலே சமைத்து அதனை அருகில் உள்ளவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் அழைக்கிறோம்.

இவ்வாறான செயல்பாடுகளை - நினைவேந்தல்களை - கஞ்சி வழங்குதல்களை உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாது, ஆலயங்களிலும், சமூக அமைப்புகளிலும், வீதிகளிலும் முன்னெடுக்குமாறும் அத்தனை மக்களையும் கேட்டுக் கொள்கிறோம். இதனை ஏன் நாங்கள் செய்கிறோம் என்பதை எங்களுடைய பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும்படியாகவும் அன்புரிமையோடு கேட்டு நிற்கின்றோம்.

இந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கு காரணமான அத்தனை பேரும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஒருமித்த குரலில் மக்களின் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறக்கூடிய - மக்களுக்கான நிர்வாக அல்லது எந்தத் தாகத்தோடு நாங்கள் போராடினோமோ அந்த தாகங்கள் நிறைவேறும்படியாக நாங்கள் எம்மை அர்ப்பணிப்பதும் அவசியமாக இருக்கிறது.

இன்றும் இடம்பெற்று வருகின்ற பல்வேறு வகையான இன அழிப்பு விடயங்கள், பௌத்த மயமாக்கல்களுக்கு எதிராகவும் நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்பது அவசியம் என்பதை இந்த வேளையிலே உணர்த்தி - முள்ளிவாய்க்காலில் அனைவரையும் பங்கெடுக்குமாறு அன்போடு கேட்டுநிற்கின்றோம் - என்றார். (ஐ)

## கொழும்பு...

சமயம் - கடந்த ஏழு மாதங்களாக காணாமல் போயுள்ளார். இது தொடர்பில் கடந்த 2022 ஒக்ரோபர் 13ஆம் திகதி பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும், தனது மகன் குறித்து இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று இளைஞனின் தாயார் சிவகுமார் காந்திமதி தெரிவித்துள்ளார்.

மனநிலை பாதிக்கப்பட்ட குறித்த இளைஞர் அதற்கு சிகிச்சைகளையும் பெற்றுக்கொண்டிருந்தார் என்றும் மகன் கிடைக்காத நிலையில் ஊடகங்களை நாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காணாமல்போன இளைஞன் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் 077 598 8204, 077 554 7218 என்ற கைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-03)

## வடக்குக்கு

மேலும், வடக்கு மக்களுக்கு தேவையானவற்றை வழங்குவதற்கு முழுமையான ஒத்துழைப்பை தருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எங்களிடம் உறுதி அளித்திருக்கின்றார். தாராள சிந்தனை கொண்ட ஒரு ஜனாதிபதியின் கீழே வடக்கு மாகாணத்திலே ஆளுநராக பதவியேற்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

வடக்கு மக்களுக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றும்படியும் மக்களுக்கான தேவைகள் குறித்து தொடர்ந்து கலந்துரையாடுமாறும் எம்மிடம் கூறியிருக்கின்றார். ஜனாதிபதி தருகின்ற கடமைகளை செய்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன், மக்களுக்கு தேவையானவற்றை மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து செய்வதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்- என்றார். (ஐ)

## வடக்கு, கிழக்...

றும் கூறியுள்ளது.

இந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் போதுமானளவு நீரை அருந்துமாறும் இயலுமான வரை நிழலான பகுதிகளில் ஓய்வெடுக்குமாறும் இயலுமானவரை வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியுமாறு மக்களை வளிமண்டல திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## கல்லடி...

இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மேலும், இது கரி வாரம். 2009 மே 18 காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பொதுமக்கள் இந்த வாரத்தில் கொல்லப்பட்டதாக முன்னாள் மன்னார் ஆயர் யோசப் இராயப்பு தகவல் வெளியிட்டார்.

கிட்டத்தட்ட இந்த போர் தொடங்கிய காலமிருந்து 3 இலட்சம் மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டனர். அதில் பல தலைவர்களும் உள்ளடக்கப் பட்டுள்ளனர். இருந்தபோதும் இந்த முள்ளிவாய்க்கால் வாரத்தை நாங்கள் வருடா வருடம் நினைவு கூர்ந்து வருகின்றோம்.

கடந்த இரண்டு வருடங்கள் கொரோனா தொற்று பரவலால் பணிமனைகள் வீடுகளில் நினைவு கூர்ந்தோம் இருந்தபோதும் இந்த முறை தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியம் கல்லடி கடற்கரையில் மாலை 5 மணிக்கு நினைவேந்தலை முன்னெடுக்கிறது. இந்த நினைவேந்தலில் இன, மத சமய வேறுபாடுகளின்றி உணர்வுபூர்வமான - தமிழ் பேசும் மனிதனாக - தமிழினத்துக்காக தமிழினத்தின் உரிமைக்காக போராடிய இனமாக நினைவேந்தலை மேற்கொள்ள கல்லடி கடற்கரையில் மக்கள் அனைவரும் ஒன்று கூட வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## கைதான...

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இந்த நிலையில், நேற்று காலை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தனது சட்டத்தரணியுடன் யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆனல்ட் சரணடைந்தார். அவரை கைது செய்த பொலிஸார் நேற்ஷறைய தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். (ஐ-03)

## வடக்கு...

மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான், வட மேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

முன்னர் பதவி வகித்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், வட மேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட ஆகியோரை பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதி கடந்த 15 ஆம் திகதி நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

தும் அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் சமய நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், வடக்கு, கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மத தலங்கள், பாடசாலைகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்சார் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன், பொதுஅமைப்புகள், பொது இடங்கள், நிறுவனங்கள், அரசியல் கட்சிகளின் பணிமனைகளிலும் முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டி இனஅழிப்பின் குறியீட்டு உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சியை இன்றும் வடக்கு, கிழக்கு முழுவதும் வழங்குவதற்கு பல பொது அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஏற்பாடுகளை செய்துள்ளன.

இதேசமயம், புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் வாழும் நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

தமிழ் மக்களின் உரிமைக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் 4 கட்ட ஈழப் போர்களாக நடைபெற்றது. இறுதிப் போர் கட்டம் 2006 - 2009 மே வரை நீடித்தது. மோதலில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அகப்பட்டனர். இறுதியாக முள்ளிவாய்க்கால் என்ற சிறு நிலப்பரப்புக்குள் இந்த மக்கள் இறுதியாக முடக்கப்பட்ட போது மனித குலத்துக்கு விரோத செயல்கள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ் மக்கள் சொல்லொணா துன்பங்கள் - துயரங்களை - அழிவுகளை சந்தித்தனர். இறுதிக்கட்டத்தில் மட்டும் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. இந்தப் போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட மே 18ஆம் நாளை தமிழின அழிப்பின் அடையாள நாளாக தமிழ் மக்கள் நினைவேந்தி வருகின்றனர். கொல்லப்பட்ட தமது உறவுகளின்ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் அதேநேரம், படுகொலை செய்யப்பட்ட தமது இன மக்களுக்காக நீதி கோரும் நாளாகவும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## தொல்...

கள் உடைப்புடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு பணித்துள்ளது.

வெடுக்குநாறிமலையில் சிலைகள் உடைக்கப்பட்ட விடயம் தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கில் முறைபாட்டாளார்கள் சார்பில் முற்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது,

இந்த வழக்கில் தொல்பொருள் திணைக்களம் முதன்முறையாக முன்னிலையாகி நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மீறி முறைப்பாட்டாளர்கள் செயல்பட்டனர் என்று தகவல் கொடுத்திருந்தனர். இன்றும் (நேற்றும்) அந்த விடயத்தை சொன்னார்கள்.

இருப்பினும் தொல்பொருள் தொடர்பான இந்த பிரதேசத்திலே மார்ச் மாதம் இடம்பெற்ற மோசமான விக்கிரகங்கள் உடைப்பு சம்பவத்தில் தொல்பொருள் திணைக்களம் ஒரு விரலைகூட அசைக்கவில்லை. அந்த விடயத்தை கரிசனையில்கூட எடுக்கவில்லை.

அதனை மீள நிறுவும்படி நீதிமன்றம் உத்தரவை வழங்கிய பின்னரே, மீள நிறுவியதால் தொல்பொருள் சேதம் ஏற்பட்டதாக பொய்யான புகாரை தெரிவிப்பதாக நாம் மன்றுக்கு எடுத்துரைத்தோம்.

அந்தவிடயத்தில் இதுவரைக்கும் சந்தேகநபராக எவரையும் குறிப்பிடவில்லை. தொல்பொருள் திணைக்களம், வனவளத்திணைக்களம் போன்றவற்றால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுகின்ற ஓரிடத்தில் இப்படியான விக்கிரகங்களை உடைத்தமை விசித்திரமான விடயம் என்பதையும் கூறினோம்.

எனவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு கட்டளை இட்டுள்ளார். அத்துடன் தொல்பொருளுக்கு சேதம் ஏற்பட்டால் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். இது நீதிமன்ற கட்டளையை மீறி செயல்பட்டமை தொடர்பாக இருப்பதால் அதற்கான நடவடிக்கைகளை உரியமுறையிலே எடுக்குமாறு தொல்பொருள் திணைக்களத்துக்கு மன்றால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தொல்பொருள் அடையாளங்கள் சேதமாகின்ற வகையில் செயல்படாவண்ணம், சமய சடங்குகளை எளியமுறையிலே செய்வதற்குமான அறிவுறுத்தலும் முறைப்பாட்டாளர்களான எங்களுக்கு மன்றால் வழங்கப்பட்டுள்ளது- என்றார். (ஐ)

## சந்தர்ப்பம்...

ளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

தமிழீழத்துக்காகப் போராடிய விடுதலைப் புலிகள்கூட அரசாங்கத்துடன் பேசுவதற்கான சந்தர்ப்பம் வரும் போது பேசுவதற்கு தவறவில்லை. 1994ஆம் ஆண்டு, 2001 ஆம் ஆண்டுகளில் பேச்சுகளில் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களின் வாக்குகளால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் சென்ற எங்களுக்கும் அவ்வாறான பொறுப்பும் தார்மீகக் கடமையும் உள்ளது.

எமது பிரச்னை தொடர்பாக நாம் எந்த உலக நாடுகளிடமும் பேசச் செல்லும்போது அவர்கள் சொல்லும் கருத்து, அரசாங்கத்துடன் பேசவேண்டும் என்பதே. சரியோ, பிழையோ அரசாங்கத்துடன் பேச வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உண்டு.

ஜனாதிபதியுடன் 8ஆம் திகதி நடந்த சந்திப்பை தொடர்ந்து கடந்த 11ஆம் திகதி அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான சந்திப்பு நடைபெற்றது.

அதில் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் வடக்கு - கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகத்துக்கான முன்மொழிவை முன்வைத்தபோது அதை ஜனாதிபதியும் முன் மொழிந்தார். அதை நாங்கள் நிராகரித்தோம்.

குறித்த கலந்துரையாடலில் மிக முக்கியமான விடயங்கள் பேசப்படவில்லை. அதிகாரப் பகிர்வு தொடர்பாக தொட்டு பார்க்கப்பட்டது. ஏற்கனவே இலங்கையின் சட்டத்துக்கு உட்பட்ட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு எல்லா தரப்புகளாலும் முன்வைக்கப்பட்டது.

குறித்த தேர்தலை நடத்தினால் அதிலிருந்தாவது ஆரம்பப் புள்ளி முன்வைக்கப்படலாமா என்றுகூடப் பேசப்பட்டது. இன்று தமிழர்களுக்கான தீர்வு சமஷ்டி என்பதிலிருந்து விட்டுக் கொடுத்தோ விலகியிருந்தோ பேசவில்லை. முஸ்லிம் கட்சிகள் இணைக்கப்படவில்லை என்பது தவறானது. பேச்சில் அமைச்சர் நசீர் அகமட்டும் இருந்தார்.

வடக்கு - கிழக்கு இணைப்பு வரும் போது முஸ்லிம் மக்களுடன் சேர்ந்ததாகவே வரும். அதுதான் கட்சியின் தலைவரின் நிலைப்பாடும்.

நாணய நிதிய நிதியைப் பெறுவதற்கான நாடகம் என்று கட்சிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் சொல்வது இருக்கலாம். இலங்கை பொருளாதார உதவியை பெறுவதற்கு தமிழ் மக்களின் பிரச்னையை தீர்க்குமாறு உலக நாடுகள் சொல்கின்றன. அவ்வாறு தீர்க்கவேண்டிய பொறுப்பு ரணிலுக்கு இருக்கிறது -என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம் மீதான ஆக்கிரமிப்பை தடுக்கப் போராட்டம்!

## இன்று அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு

கிளிநொச்சி, மே 18

**கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் மீது, தொல்பொருளியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக இன்று வியாழக்கிழமை காலை ஆலய அறங்காவலர் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் மத மற்றும் கட்சி வேறுபாடுகளற்று அனைத்துத் தரப்பினரையும் இணைந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.**

ஆலய வளாகத்தினுள் தொல்பொருள் சின்னங்கள் இருப்பதாகவும், அவ்விடத்தை எல்லைப்படுத்தும் வேலைகளை இன்று வியாழக்கிழமை மேற்கொள்ளப்போவதாகவும் கரைச்சிப் பிரதேச செயலாளரால் ஆலய நிர்வாகத்தினருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையிலேயே இந்த எதிர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தினர் அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ள முனைந்த போது, ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு, அளவீட்டில் ஈடுபட வந்த அதிகாரிகளையும், பொலிஸாரையும் அங்கிருந்து வெளியேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மகிந்த உள்ளிட்ட சிலருக்கு எதிரான வெளிநாட்டுப் பயணத் தடை நீக்கம்!

கொழும்பு, மே 18

கடந்த வருடம் மே 9 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடை முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பயணத் தடையை நீக்குவதற்கான உத்தரவு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் காஞ்சன ஜயரத்ன ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடை இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது. (அ)

# சாதாரண தர பரீட்சைக்கான அனுமதி அட்டை விநியோகம்

கொழும்பு, மே 18

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை தபாலில் அனுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அவர்களது தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கூறினார்.

பரீட்சை அனுமதி அட்டையிலுள்ள பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, விண்ணப்பித்த பாடங்கள் மற்றும் மொழிமூலத்தில் மாற்றம் இருக்குமாயின் அல்லது புதிதாக ஏதாவது விடயத்தை சேர்க்க வேண்டுமாயின் அதனை ஒன்லைன் ஊடாக மேற்கொள்வதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த திருத்தங்களை எதிர்வரும் 24 ஆம் திகதி நள்ளிரவு வரை மேற்கொள்ள முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள், மாநாடுகள், முன்னோடி பரீட்சைகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளும் எதிர்வரும் 23 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவு செய்யப்படவேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, முன்னோடிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை அச்சிடுதல், பகிர்ந்தளித்தல், கையேடுகளை விநியோகித்தல், இலத்திரனியல் ஊடகங்களினூடாக தகவல்களை பரிமாறுதல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவை மீறும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது பொலிஸ் தலைமையகத்திற்கோ அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஜூன் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமக்கான தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கவில்லையாயின், பிரதேச செயலகத்தில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு, பாடசாலை அதிபர் அல்லது கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பட்டபோதிலும், இது வரை தேசிய அடையாள அட்டை கிடைக்காதிருந்தால் அது தொடர்பில் ஆட்பதிவு திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

# கொழும்பிலும் இடம்பெறவுள்ளது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

கொழும்பு, மே 18

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 14 வருட நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று கொழும்பிலும் இடம்பெறவுள்ளன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு பொரளை கனத்தை சுற்றுவட்டத்தில் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதத்தில் இன்று கொழும்பில் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இன்று இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்பவர்கள் வெள்ளை மலர்களை கொண்டுவரவும் என ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# மன்னார் கிராம அலுவலர் உட்பட 11 பேர் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, மே 18

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ஜோர்ஜியா செல்ல முயற்சித்த கிராம உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 9 ஆண்களையும் 2 பெண்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் (வயது-36) மன்னாரைச் சேர்ந்தவராவார்.

கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 31, 36, 33, 34 மற்றும் 22 வயதுடையவர்களாவர்.

இந்த சந்தேக நபர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (அ)

# ரூபாயின் பெறுமதி உயர்வு

கொழும்பு, மே 18

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் விலை 302.42 ரூபாவாகவும், விற்பனை விலை 316.18 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதற்கிடையில், நேற்று முன்தினம் அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் விலை 305.43 ரூபாவாகவும், விற்பனை விலை 318.79 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (அ)

# நாளை கடமையேற்பார் செந்தில்

கொழும்பு, மே 18

கிழக்கு மாகாண ஆளுநராக நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், நாளை வெள்ளிக்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் கடமை ஏற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 8:30 மணிக்கும் 10:30 மணிக்கும் இடையிலான சுபவேளையில், தமது கடமைகளை பொறுப்பேற்பார் என தெரிய வருகின்றது. (அ)

# ஏ.ரி.எம். இயந்திரத்தை உடைத்து பணம் திருடும் முயற்சி முறியடிப்பு

கொழும்பு, மே 18

வீரவில நகரில் பொருத்தப் பட்டிருந்த அரச வங்கி ஒன்றுக் குச் சொந்தமான தானியக்க பணப் பரிமாற்ற இயந்திரத்தை உடைத்து பணம் பெறும் கொள் ளையர்களின் முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டது.

பொலிஸாரினால் பொருத் தப்பட்டிருந்த அவசர சமிக்ஞை நேற்று அதிகாலை 2.50 மணியளவில் ஒலியெழுப்பியதையடுத்து பொலிஸ் குழுவொன்று உடனடியாக அவ்விடத்துக்கு சென்றது.

இதன்போது பொலிஸார் வருவதைக் கண்ட கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைதுசெய்யும் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# திருகோணமலைக்கு சுற்றுலா சென்ற தமிழக இளைஞர் நீரில் மூழ்கிப் பலி!

கொழும்பு, மே 18

இந்தியா தமிழ்நாட்டில் இருந்து திருகோணமலைக்கு சுற்றுலா வந்த இளைஞரொருவர் நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை- அலஸ்தோட்டம் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நண்பர்களுடன் நீராடச் சென்றபோது நீரில் மூழ்கியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

நீரில் மூழ்கிய நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தபோது நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தமிழ்நாடு- திருநெல்வேலி 76ஃஏ சர்க்கரை விநாயகர் வீதியில் வசித்து வரும் கஸ்தூரி ரங்கன் ஜெயசூர்யா (வயது-26) என தெரிய வருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.